மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 6 ஜூன் 2015 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## இரத்தம் குடிக்கும் புத்தம்

## மெல்லக் கொல்லும் நஞ்சருந்திச் சாவோம்!



NEW

FLAT FOR SALE @ BESANT NAGAR

**4 - in -one luxury Apartment**



Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

Mutram monthly Jun 2015

பல்சுவை இதழ்

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

மெல்லக் கொல்லும்
நஞ்சருந்திச் சாவோம் (தலையங்கம்) ....4

கூட்டாளி (ஈழத் திரைப்படம்).... 6

மழலைக்கு விடுதி (சிறுகதை)
இருங்கோவேள்.... 7

சீவக சிந்தாமணி அறிமுகம்
புலவர் கு. ஏழுமலை.... 9

ஆவின்றி அமையாது உலகு!
மாட்டின் பயன்பாடுகள்.... 12

ஈழக் கவிதை.... 15

தமிழீழம் எனும் நெருப்பு
காசி ஆனந்தன்.... 17

கம்பரை கவியால் மடக்கிய விவசாயி
க. முத்து.... 19

நோய்கள் தீண்டாமல்
நலமாக வாழ வழிகள்.... 21

உண்மையைத் தேடி
இராஜாசிங்.... 23

வட இந்திய கவியை வாதிட்டு வென்ற
உமறுப்புலவர்.... 27

இரத்தம் குடிக்கும் புத்தம்.... 28

சின்னான் (சிறுகதை)
இருங்கோவேள்.... 32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.

# மெல்லக் கொல்லும் நஞ்சருந்திச் சாவோம்!



மனித சமுதாயம் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக இருந்து வரும் உழவுத் தொழிலில் வேதிப்பொருட்களின் ஆதிக்கம் சர்வாதிகாரத் தன்மையை எட்டிவிட்டது. நிலத்தைப் பண்படுத்துவதையே இரசாயன முறையில் மேற்கொள்ளத் தொடங்கி விட்டால் உணவுப் பொருட்கள் எப்படி நலம் பயப்பதாக இருக்கும்?

உழவுத் தொழிலில் இடுபொருட்கள் அனைத்தும் இரசாயனம் தான். உரங்கள் தொடங்கி, பூச்சிக் கொல்லி மருந்துகள் வரை விளைச்சலைப் பெருக்குவதாக இருக்கலாம். ஆனால் அவைகள் எல்லாம் மனித உயிருக்கு உலை வைக்கும் நஞ்சுப்பொருட்கள் என்பதை நாம் அறிந்திருந்தும் அவற்றைத் தவிர்க்காது உபயோகித்து வருவதுதான் வேதனை.

இது இப்படி இருக்க, மிகப்பெரும் முதலாளிகள் தாங்கள் சம்பாதிக்க நேரிடையாகவே சுவையூட்டும் நஞ்சை உணவுப் பொருட்களில் கலப்பது என்பது மனித சமுதாயத்தை முற்றிலும் நாசப்படுத்தக் கூடிய செயலாகும்.

பல காலமாக, பலநூறு சமூக ஆர்வலர்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த உணவில் நஞ்சு இருக்கிறது. இந்த பானத்தில் நஞ்சு இருக்கிறது என்று. ஆனால், அரசுகளுக்கு அந்தச் சத்தம் கேட்டதே இல்லை. மொத்த இந்திய சமுதாயத்தையும் பாதிக்கும் என்று ஓலமிடுகிறார்களே, அதைக் காது கொடுத்துக் கேட்போம்! அதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதித்துப் பார்ப்போம் என்ற சொந்த புத்தியோ, சொல் புத்தியோ இல்லாமல் தங்களது நலன்



ஒன்றையே நெற்றிப்பொட்டில் ஏற்றிக் கொண்டு கடிவாளம் கட்டிய குதிரைகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன அரசுகள்.

தற்போதுதான் மேகி நூடுல்ஸ் என்ற உணவுப் பொருளில் உள்ள சிக்கல் வீதிக்கு வந்திருக்கிறது. பீகார் மாநில வழக்கறிஞர் சுதிர்குமார் ஓஜா என்பவர் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார். நெஸ்லே நிறுவனத்தின் அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கக் கோரியும் அந்தப் பொருளை விற்பதற்காக விளம்பரப் பாத்திரங்களாக விளங்கிய அமிதாப்பச்சன், மாதுரி தீட்சித், பிரீத்தி ஜிந்தா போன்றவர்களை விசாரிக்க வேண்டும் என்றும் அவர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

பன்னாட்டு நிறுவனம் தயாரிக்கும் மேகி நூடுல்ஸ் என்ற உணவுப் பொருளில் அனுமதிக்கப் பட்ட அளவை விட காரீயமும் சுவை கூட்டும் மோனோ சோடியம் குளூட்டோமேட் ரசாயனமும் அதிகமாக கலந்துள்ளது என டெல்லி உணவு தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் கண்டறிந்துள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் இந்த உணவுப்பொருளுக்கு தடை வந்துவிட்டது, தொடர்ந்து கேரளா, புதுச்சேரி போன்ற இடங்களிலும் தமிழ்நாட்டிலும் இன்னும் சில மாநிலங்களிலும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்கள் ஆய்வு செய்து வருகின்றன. இந்த நடவடிக்கைகள் போன்று, மனிதர்களை மெல்லக் கொல்லும் நஞ்சுகளை அகற்ற உடனுக்குடன் அரசு நடவடிக்கை எடுக்குமேயானால் இந்தியர்கள் காப்பாற்றப்படுவார்கள். மேகி பிரச்சினையில் ஒரு கொடுமை என்னவென்றால், அந்தத் தயாரிப்பு நிறுவனத்தின் அதிகாரி எங்கள் உணவு பாதுகாப்பானது, நலம் பயப்பது என்று சொல்வதுதான்.

எழுபது, எண்பது காசுகள் உற்பத்திச் செலவில் தயாரிக்கப்படும், உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் பன்னாட்டு குளிர் பானங்களை, பத்து ரூபாய், இருபது ரூபாய் கொடுத்து வாங்கிக் குடித்து நஞ்சுக்கு இரையாகிக் கொண்டிருக்கும் இந்தியர்கள் பற்றி கவலை கொள்ளாது ஆட்சி நடத்தும் அரசுகள் குடிமக்களின் நலனுக்காக எப்போது ஆட்சி செய்யப் போகின்றன? குறிப்பிட்ட ஒரு குளிர்பானத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, எரிகிற அடுப்பின்மேல் வைத்து காய்ச்சுகிறார்கள். அதன் இறுதி நிலையாக சாலைகளுக்குப் போடப்படும் தார் கிடைக்கிறது என்ற தகவலும் சேர்ந்த ஒளிப்படம் முகநூலில் வெளிவந்தது. ஆனால் அதில் எந்த வித ஆபத்து எதுவும் இல்லை என்பது போல் அரசுகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

இன்னும் முக்கியமாக, மருந்து, மாத்திரைகளில் பலவிதமான மோசடித்தனங்கள் நடக்கின்றன. வெளிநாடுகளில் இந்த மருந்தால் ஆபத்து, இது வேண்டாம் என்று தடை பெற்றவைகள் எல்லாம் இந்தியாவில் ஏகபோகமாக விற்கப்படுகின்றன. அதை நாமும் பயன்படுத்தி வருகிறோம். அவன் ஏன் தடை செய்தான் என்று அரசு யோசிப்பதில்லை. அப்படியே காரணம் தெரிந்தாலும் எதையாவது வாங்கி வயிற்றை நிரப்பிக் கொண்டு, தன் பெண்டு பிள்ளைகளுக்கு வேண்டும் என்று சேர்த்து வைத்துக் கொண்டு இந்தியன் சாகட்டும் என்று அந்த இந்தியர்கள் நினைத்து விடுகிறார்கள்.

இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் ஆளுகின்ற அரசுகள், ஏன் வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள்? கையூட்டு என்ற பசை அவர்கள் வாய்களைத் திறக்கவிடாமல் செய்து கொண்டிருக்கிறது. இப்படி இருப்பதால் தங்களது குடும்பமும் தானும் பாதிக்கப்படுவோம் என்ற விபரம் தெரிந்தும், எரியும் அடுப்பின் மேல் வைக்கப்பட்ட பானையின் இளஞ் சூட்டில் மகிழும் ஆமைகளாக அரசுகள் எத்தனை நாட்களுக்குத்தான் இயங்கப் போகின்றன?

**வி.கே.பாண்டே**

இந்தியா முழுவதும் பெரும் சர்ச்சையை உண்டாக்கிய மேகி நூடுல்ஸ் விற்பனைக்கு தடை கோரி சட்டப் போராட்டம் நடத்தி வென்று காட்டியுள்ளார் ஒரு நேர்மையான அதிகாரி. இதனால் அவருக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

அவர் பெயர் வி.கே.பாண்டே. உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேந்தவர். அம்மாநிலத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிவரும் வி.கே.பாண்டே, மக்கள் நலனில் உண்மையாகவே அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறார்.




இதுவரை வெளிவந்த ஈழத்து திரைப்படங்களி லிருந்து மாறுபட்டது. இத்திரைப்படம் என்ற அறிவிப்போடு வெளிவர இருக்கிறது கூட்டாளி திரைப்படம்.

தமிழ் ஈழம் மலர்ந்தால் அந்த மண்ணும் மனிதர்களும் எப்படியிருப்பார்கள் என்பது தான் கதை. இந்துப் படத்துக்கு திரைக்கதை, வசனம் எழுதி, இயக்கி, கதாநாயகனாக நடித்திருக்கிறார் சி.நிரோஜன். இவர் மணிவண்ணன், சீனுராமசாமி, சுப்ரமணியசிவா, அரவிந்தன், சிவப்புமழை வி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரிடம் உதவி இயக்குனராக இருந்தவர்.

யுத்த பூமியில் நடந்த ரத்த கோரங்களை மையப்படுத்தி இயக்கிய மண்ணும் சிவந்தது மற்றும் ஏன் ஆகிய குறும்படங்களுக்காக, காட்சித் தொடர் பியல் படிப்பின் போது பல விருதுகளை வென்றெடுத்தவர் இவர்.

குறிஞ்சிப்பாடியில் ஈழத்தமிழர்கள் வாழ்ந்த (?) முகாம் குறித்த தமிழ்ச்சாதி தஞ்சையில் இருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் குறித்த ஆவணப்படங்கள் உணர்வாளர்களால் உச்சி முகர்ந்து பாராட்டப்பட்டன.

ஐ.ஏ.எஸ்.அதிகாரி சகாயம் ஏற்பாட்டில் இவர் இயக்கிய கோ ஆப்டெக்ஸ் பற்றிய வேட்டிதினம் மற்றும் நெசவாளர்களின் வாழ்வியல் குறித்த நெசவுக்குப்பின்னால் ஆவணப்படங்கள், பார்த்தவர் களால் பாராட்டுப்பெற்றன. இப்போது நிரோ ஜனின் கனவுப்படைப்பாக திரைக்களம் காண தயாராக இருக்கிறது கூட்டாளி திரைப்படம். நித்யன் கார்த்திக் இசையில் எஸ்.பி.பாலசுப்ர மண்யம், வி.வி.பிரசன்னா, ஹரிபிரியதர்ஷினி குரல்களில் உருகவைக்கும் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. பழனி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்தப் படத்துக்கு நீர்ப்பறவை, தென்மேற்கு பருவக்காற்று, இடம் பொருள் ஏவல் உள்ளிட்ட 50 படங்களில் பணியாற்றியிருக்கும் மு.காசி விஸ்வநாதன் படத்தொகுப்பு செய்திருக்கிறார். எஸ். சூரியகுமார் தயாரித்திருக்கும் கூட்டாளி தமிழ்ப் பங்காளிகளைச் சந்திக்க விரைவில் வருகிறான்.

சிறுகதை

**இருங்கோவேள்**

ஒரு குறிப்பிட்ட சமூகம் செறிந்து வாழும் பகுதின் நடு நாயகமாக இருந்து நல்லூர். முக்கியமான அரசியல் கூட்டங்கள் தொடங்கி, பேருந்து வசதி, உணவகம், தங்கும் விடுதி, திரையரங்கு என்று ஒரு சிறு நகரமாகவே திகழ்ந்தது நல்லூர்.

சீனிவாசன் தனது சாதித் தலைவர் நடத்தி வரும் கட்சியில் அந்தப் பகுதிக்கு பொறுப்பாளராக இருந்தான். அந்த நல்லூர் மக்கள் அனைவருக்கும் இவனைத் தெரியும். அவ்வூரில் உள்ள சில பெரிய மனிதர்கள் ஒன்று சேர்ந்து கல்வி நாள் என்று ஒரு நாளைக் கொண்டாடினார்கள்.

கல்வி நாள் விழாவிற்கு சீனிவாசனும் வந்திருந் தான். பல வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான். விழாவிற்கு நல்லூருக்கு அருகே உள்ள ஊர்களில் நடந்து கொண்டிருக்கும் கல்விக் கூடங்களில் இருந்தெல்லாம் ஆசிரியர்கள் வந்திருந் தார்கள். அதில் ஆங்கில வழியாக பாடம் சொல்லித் தரும் ஒரு பள்ளியின் முதல்வரான இருதயராஜும் வந்திருந்தார். ஒவ்வொருவராக கல்வியைப்பற்றிப் பேசினர். அதில் ஒருவர் பேசுகையில் ஓரிடத்தில் ஆங்கில வார்த்தையை உச்சரித்தார். இதைக் கேட்டு பொங்கி எழுந்தான் சீனிவாசன். எங்கள் தலைவர் தமிழுக்காகவே வாழ்பவர் அவரது கட்சிக்காரன் நான். அவரது சாதியைச் சேர்ந்தவன் நான். இங்கே இருக்கிறவர்களில் அதிகம் பேர் என் சாதிக்காரர்கள் தான். நாங்கள் தலைவர் வழியிலே நடப்பவர்கள். ஆகவே ஆங்கிலத்தில் நீங்கள் பேசக் கூடாது என்று ஆவேசப்பட்டான். பேசியவர் அச்சமடைந்து திக்கித் திணறி தமிழில் பேசி விட்டு அமர்ந்தார். அவருக்குப் பின் வந்த அனைவருமே தமிழில் பேசினர். இருதயராசுவோ ஆங்கிலப்பள்ளியின் ஆசிரியர். எல்லோரும் படிக்க வேண்டும் ஆங்கிலத்தையும் படிக்க வேண்டும் என்று சொல்ல நினைத்த அவர் சூழ்நிலையை எண்ணி மிகச் சுருக்க மாக தமிழில் பேசிவிட்டு அமர்ந்தார். ஆனால் அவருக்கு

# மழலைக்கு விடுதி



திருப்தியில்லை. நானும் தமிழன்தான். ஆனால் மற்ற மொழிகளைப் படிக்கக் கூடாது, தெரிந்து கொள்ளக்கூடாது என்று நினைப்பவன் அல்ல. பிறமொழிகளைக் கற்பது என்பது வேறு, பிறமொழித் திணிப்பு என்பது வேறு. இதை எப்படி இவர்களுக்குப் புரிய வைப்பது என்று புரியாமல் விழா முடித்து வீட்டுக்குச் சென்றார்.

மாதங்கள் உருண்டோடின. கல்வி ஆண்டு முடிந்து புதிய கல்வியாண்டு வந்து விட்டது. ஜூன் மாதம் பள்ளியில் சேர்க்கைகள் நடந்து கொண்டிருந்தன. இருதயராசு முதல்வராக இருக்கும் ஆங்கிலப் பள்ளிக்கு சீனிவாசன் வந்தான். இருதயராசு அவனை வரவேற்று அமரச் சொன்னார். சீனிவாசன் இதுவரை பள்ளிக்கு வந்ததே இல்லை. யாரையாவது பள்ளியில் சேர்க்க வேண்டும் என்றால் இருதயராசுக்கு கடிதம் எழுதிக் கொடுத்தனுப்புவான் இருதயராசுவும் சேர்த்துக்கொள்ளுவார். இந்த ஆண்டோ நேராகவே வந்திருக்கிறானே என்ற வியப்பு பள்ளியின் முதல்வருக்கு.

அய்யா எனது மகனுக்கு வயது மூன்று ஆகிவிட்டது. எங்க கட்சித் தலைவர் மகன் படிச்ச படிப்பையே என் மகனும் படிக்கணும். எங்க தலைவர் மகன் மாதிரி இங்கிலீசு பேசணும். ஆஸ்ட்டல்லேயே தங்கிப்படிக்கணும். வீட்டுக்கெல்லாம் வரத் தேவையில்லை. முழுப்பரிட்சை லீவுக்கு வந்தா போதும். அந்த மாதிரி என் பையனைச் சேத்துக்குங்க, படிப்புச் சொல்லிக் குடுங்க என்றான் சீனிவாசன், வந்த சிரிப்பை அடக்கிக் கொண்ட முதல்வர் மேடைக்கு ஒரு வாழ்க்கையும் தனக்கென்று ஒரு வாழ்க்கையையும் வாழ்கிறார்களே இவர்களை நினைத்து அழுவதா? சிரிப்பதா என்று எண்ணியவாறே, சீனிவாசனுக்கு விளக்கத் தொடங்கினார் எல்.கே.ஜிக்கு எல்லாம் ஆஸ்டல் வசதி கிடையாது. உங்க தலைவரின் மகன் கூட ஆறாம் வகுப்பிற்கு தான் கொடைக்கானல் சென்று படித்தார்.

ஐந்து வகுப்புவரை இங்கே படிக்கட்டும். அதன்பிறகு உங்கள் தலைவரின் மகன் படித்த பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்கள்" என்றார் இருதயராசு.

ஆங்கிலப்பள்ளி முதல்வரின் ஆலோசனையைக் கேட்டுக் கொண்ட சீனிவாசன் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியில் வந்தார். இருதயராசு இங்குள்ள தலைவர்களைப்பற்றியும், அவர்கள் போடும் இரட்டை வேடங்களையும் நினைத்து மனதில் புழுங்கினாலும் தொண்டர்கள், தலைவர்களின் இரட்டை வேடத்தைத்தெரிந்து கொண்டு வாழத் தொடங்கி விட்டார்களே என்று வியந்தார். எல்.கே.ஜிக்கு ஆஸ்டல் கேட்ட அவனது அப்பாவித்தனத்தையும் தலைவர், தமிழ் என்று சொல்லி தன் மகனை மட்டும் ஆங்கிலத்தைப் படிக்க வைத்ததை புரிந்து கொண்ட புத்திசாலித்தனத்தையும் திரும்பத் திரும்ப நினைத்தவர் இறுதியில் உலகமே இரட்டை வேடத்தில் தான் வாழ்கிறது என்று முடிவுக்கு வந்து தனது வேலையைப் பார்க்கத் துவங்கி விட்டார்.



# சீவகசிந்தாமணி - அறிமுகம்

(தொடர்)

# கோவிந்தையார் இலம்பகம்

## (கதைச் சுருக்கம்)

2





புலவர் கு. ஏழுமலை

**குணமாலையார் இலம்பகம்**

சீவகன் காந்தருவதத்தையோடு கருத்தொரு மித்து ஆதரவு பட்டின்புற்றிருக்கும் நாளில், இனிய இளவேனிற் பருவம் வந்தெய்தியது. அப்பொழுது மாந்தர் எல்லாம் பொழில் விளையாட்டிற் புக்கனர். அவ்விராசமாபுரத்திலுள்ள சுரமஞ்சரி என்பாளும், குணமாலை என்பாளும் தந்தோழிமாரோடு விளை யாட அப்பொழிலிற் புக்கனர். அப்பொழிலின் கண் அப்பெருமாட்டியார் இருவரும் நறுஞ்சுண்ணங் காரணமாகத் தம்முட்கலாய்த்துக் கொண்டனர். தஞ்சுண்ணங்களுள் வைத்துச் சிறந்தது யாதென அறிதற்குத் தந்தோழியரை அறிஞரிடத்தே சுண்ணத்தோடு போக்கினர். அதுகண்ட அறிஞர் பலரும், அவரைச் சீவகன்பாற் காட்டி வினவும்படி அறிவுறுத்தினர். அம்மகளிர் அவ்வாறே அவற்றைச் சீவகனுக்குக் காட்டி “இவற்றுள் சிறந்தது செப்புக!“ என்று வேண்டினர். சீவகன் அவற்றை நுண்ணிதின் ஆராய்ந்து, “குணமாலை சுண்ணமே சிறப்புடையது“ என்றான். அம்மகளிர் தந்தலைவியர்பாற் சென்று இதனை உணர்த்தினர்.

சீவகன் தன் சுண்ணத்தை மதியாமை அறிந்த சுரமஞ்சரி பெரிதும் வருந்தினள். “அச்சீவகன் என் பால் வலிந்துவந்து என்னருட்கு இரந்து நிற்கும்படி யான் நோன்பியற்றுவல்“ என்று குறிப்பாலுணர்த்தித் தன் கன்னிமாடம் புகுந்து, சீவகன் தன்பால் வலிந்துவந்து அருள்வேண்டற் பொருட்டு நோன்பாற்றியிருந்தனள்.

இனி, அப்பொழிலிலே பார்ப்பனர் சோற்றுத் திரளை ஒரு நாய் தீண்டிற்றாக? அப்பார்ப்பனர் அதனைத் தடியாற் புடைத்தனர். அந்நாயைக் கண்ட சீவகன் இரக்கமுற்று, அதன் செவியில் ஐந்தெழுத்து மறைமொழியை ஓதினன். அதனால் அந்நாய் அவ்வுடல் ஒழித்துத் தேவனாயிற்று. சுதஞ்சணன் என்னும் பெயருடைய அத்தேவன் மீண்டுவந்து சீவகனை வணங்கினான். நின்னருளால் யான் இப்பொழுது இயக்கர் தலைவனாகிச் சந்திரோதய மென்னும் நகரில் இனிதே வாழும் பேறுபெற்றேன். என் பெயர் சுதஞ்சணன் என்பதாம். நினக்குக் குற்றேவல் செய்யும் கருத்துடையேன்“ என்றனன். அது கேட்ட சீவகன் வியந்து “நண்ப! நீ எனக்குப் பகைவரால் துன்பம் நேர்ந்தபோது துணைபுரிவா

யாக! இப்பொழுது நின்னூர் சென்று இன்புற்று வதிக!" எனக் கூறி விடுவித்தனன்.

மாந்தரெல்லாம் பொழிலில் ஆடி மீண்டு வந்தனர். அப்பொழுது கட்டியங்காரன் பட்டத்து யானையாகிய அசனிவேகம் செருக்குற்றுப் பாகர்க்கடங்காமல் சிதைந்து ஓடிற்று. அதனெதிரே வந்த குணமாலையைச் சீறி அவளைக் கொல்லத் தொடங்கியது. அவ்வழியே வந்த சீவகன் விரைந் தோடி அதனை அச்சுறுத்தி ஓட்டிக் குண மாலையை உய்யக்கொண்டனன். இருவருளங்களும் ஒன்றுறக்கலந்தன. குணமாலை சீவகன்பாற் காதல் கொண்டுள்ள செய்தியை அவள் நற்றாயாகிய வினயமாலை குறிப்பானுணர்ந்து தந்தையாகிய குபேரமித்திரனுக் குணர்த்தினள். அவனும் பெரிதும் மகிழ்ந்து கந்துக்கடனிடத்தே தூதுவிட்டுத் தன் கருத்தை உணர்த்தினன். அவனும் மகிழ்ந் துடன் பட்டனன். அவ்வழி, சீவகனுக்குங் குணமாலைக்கும் திருமணஞ்சிறப்பாக நிகழ்ந்தது. இருவரும் ஈருடற்கு ஒருயிராய் இணைந்து இன்புற்றனர்.

இனிச் சீவகனுக்குத் தோற்றமையால் நாணிக்க வளமறுத்து நின்ற அசனிவேகத்தைக் கண்ட கட்டியங்காரன், நிகழ்ச்சியெல்லாம் வினவி அறிந்த னன். சீவகன்பாற் சீற்றங்கொண்டான். "அவனைக் கட்டி என் முன்னர்க் கொணர்க" என மதனனை மறவருடன் ஏவினன். அவர்கள் சீவகன் இல்லத்தை வளைத்துக் கொண்டனர். சீவகன் சினந்து போராற் றப் புலிபோலப் புறப்பட்டனன். தான் தன் ஆசிரிய னுக்கு அளித்த உறுதிமொழியை நினைந்து அடங் கினன் இருமுதுகுரவரும் அரசன் ஆணைக்கு அடங்கி அவன்பாற் செல்லுதலே அறிவுடைமை யாம் என்று செவியறிவுறுத்தினர். சீவகன் அக் கருத்திற் கிணங்கி அம்மறவர்க்கு அடங்கியவனாய் அவர் புடைசூழச் சென்றனன். நந்தட்டன் முதலி யோர் மாற்றாரை வெல்லுதற்குரிய சூழ்ச்சியை ஆராய்ந்தனர்.

இஃதறிந்த காந்தருவதத்தை தன் மந்திர வன்மை யால் சீவகனைச் சிறைவீடு செய்ய முயன்றனள். அவள் கருத்தறிந்த சீவகன் நாணினன். சுதஞ்ச ணனை நினைத்தான். சீவகனுக்குற்ற துன்பத்தைச் சுதஞ்சணன் தனது தெய்வ ஞானத்தால் உணர்ந்து, ஞெரேலெனக் காற்றையும் மழையையும் தோற்று வித்து மதனன் முதலியோரை நிலை குலைத்துப் பிறர் உணராதபடி சீவகனைத் தன் மார்போடு அணைத்தெடுத்துக்கொண்டு தன் பதியை எய் தினன். அவ்விடத்தே தமர்க்கெல்லாம் இவன் சிறப் பினை உணர்த்தினன். இவ்வாற்றால் சீவகன் சுதஞ் சணனோடு அவன் ஊரில் இனிதே உறைவானாயி னன்.

இனி, மதனன் சீவகன் எவ்வழி மறைந்தான்? என்றுணராதவனாய்த் திகைத்தனன். கட்டியங் காரன் தன்னைக் கடிவான் என்றஞ்சி ஏதிலான் ஒருவனை வாளாற் கொன்று உருத்தெரியாமல் புரட்டி விட்டுக் கட்டியங்காரன்பாற் சென்று "அரசே! மழையும் காற்றும் மிக்கமையால் சீவகனை உயிருடன் கொணர்தல் அருமையாயிற்று. ஆதலால் அவனைக் கொன்று வீழ்த்திவிட்டேன், என்றனன். அதுகேட்ட கட்டியங்காரன் மதனனைப் பாராட் டிச் சிறப்புகள் பலவும் நல்கினான்.

(தொடரும்)

## மானம் பாத்த பூமி




மானம் பாத்த பூமிமேலே
அத்தனையும் போட்டுவிட்டோம் சாமி
எங்களுக்கு அந்தி மழைகூட இல்ல சாமி
எங்க மானம் காத்திடுமா பூமி

வட்டி மேல வட்டி வாங்கி
குட்டிமேல குட்டி போட்டு
மலையா ஏறுது சாமி
நல்ல வழி சீக்கிரமா காமி

பூமியிலே பசுமை இல்லை சாமி
பசுவும் காளையும் அடிமாடா போகுதய்யா சாமி
ஆறு குளம் வத்திப்போச்சி சாமி
குடிக்க சொட்டுத் தண்ணி இல்ல சாமி சாமி.

இறையன்பு நோவா
**பூ. மணவெளி.**




ஒரு தம்பதிக்கு மூன்று மகள்கள், மூவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. மருமகன்களின் அன்பைப் பரிசோதிக்க மாமியார் விரும்பினார்.

அதற்காக ஒரு நாடகத்தை நடந்த எண்ணி, முதலாவது மகள் மற்றும் மருமகனுடன் ஒரு ஏரியில் படகு சவாரி செய்தார்.

தான் திட்டமிட்டபடி ஏரியில் விழுந்து உயிருக்கு போராடுவதாய் நடித்தார்.

இதையறியா மருமகன் உடனே தண்ணீரில் குதித்து மாமியாரைக் காப்பாற்றினார். அடுத்த நாள் காலை படுக்கையை விட்டு வெளியே வந்த மருமருமகன் வாசலில் ஒரு புத்தம் புதிய மாருதி desire கார் இருப்பதைக் கண்டார்.

அருகில் சென்று பார்த்தார். அதில் மாமியாரின் அன்புப் பரிசு என்று இருந்தது.

இதே போல் இரண்டாவது மருமகனையும் சோதித்தார். அவரும் முதல் மருமகனைப் போலவே செய்ததால் அவருக்கும் ஒரு மாருதி desire கார் பரிசாக வழங்கினார்.

மூன்றாவது மருமகனுக்கும் இதே சோதனை, திட்டமிட்டபடி தண்ணீரில் விழுந்து தவித்தார். மாப்பிள்ளை கண்டுகொள்ளவேயில்லை. மாமியார் கெஞ்சினார்.

ம்ஹூம் பார்க்காதது போல் இருந்தார் மரு மகன். மாப்பிள்ளை காப்பாற்றுங்கள் இன்னோவா கார் வாங்கித் தருகிறேன் என்று சொன்னார். காரும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம். புள்ள வளர்த் திருக்கிறா பார் புள்ளன்னு சொல்லிட்டு திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்கு வந்துவிட்டார். மாமியார் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்துவிட்டார்.

அடுத்த நாள் காலை படுக்கையை விட்டு வெளியே வந்து பார்த்தால்..

ஒரு புத்தம் புதிய BMW கார் வாசலில் நின்றது. அருகில் சென்று பார்த்தால் மாமனாரின் அன்புப் பரிசு என்ற வாசகம் காரில் தொங்கியது.

முகநூலில் இருந்து...



## அம்மா

அம்மா அம்மா அம்மா... என்ன
பெத்தெடுத்த அம்மா
அம்மா அம்மா அம்மா... சின்ன
முத்தெடுத்த அம்மா

பத்துமாசம் சுமந்த அம்மா
பக்கத்திலே இல்லையம்மா
பாசம் வச்ச எந்தனம்மா
பாலன் மனம் ஏங்குதம்மா

கல்லு மண்ணு சுமந்து அம்மா
கஞ்சித்தண்ணி வார்த்தாயம்மா
உந்தன் நலம் பாராமலே
எந்தன் உயிர் வளர்த்தாயம்மா

காடு மலை கடந்த அம்மா
பிள்ளை நலம் காத்தாயம்மா
கல்லுமழை பாராமலே
கஷ்டப்பட்ட அம்மா அம்மா

இறையன்பு நோவா
**பூ. மணவெளி.**

"மாடு ஒரு வாழை மரம்" என்று பொருத்தமாக வருணித்தார் ஒரு கால்நடை மருத்துவர். மாட்டிடம் கிடைக்கும் நாமறிந்த பாலும், இறைச்சியும் அதன் பங்களிப்பில் ஒரு பகுதி மட்டுமே. இது தவிர மாட்டின் கொம்பு முதல் குளம்பு வரை எல்லா பாகங்களும் பல துறைகளில் முதன்மையாகவும், துணையாகவும் பயன்படுகின்றன. உணவு, பற்பசை, அழகு சாதனங்கள், மருத்துவம், தொழிற்சலை, ஊர்திகள், விமானம் என மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மாடின்றி வாழ்க்கை யில்லை.

மாட்டை சாணி போடும் ஒரு புனித மிருகமாக சித்தரிக்கும் மதவெறியர்களே அதைக் கேவலப் படுத்துகிறார்கள். வரலாற்றில் ஆநிரை மேய்த்தலுடன்தான் மனித வாழ்க்கை துவங்கியது. மனிதன் விலங்குகளிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு, ஆறறிவு உயிரினமாக வடிவமைத்துக் கொண்டதில் கால்நடை இறைச்சி ஒரு முக்கியக் காரணமாகும். அதன்பின் பரிணமித்த நாடோடி வாழ்க்கையிலும் சரி, நிலையான விவாசயத்திலும் சரி கால்நடைகள், குறிப்பாக மாடுகள் மனித குலத்திற்கு அளப்பரிய சேவைகளைச் செய்தன.

மனிதனது அறிவு, அனுபவம், வாழ்க்கை அனைத்திலும் மாடுகள் கொண்டிருக்கும் உறவென்பது இன்று நேற்றல்ல, பல்லாயிரமாண்டு பழமை வாய்ந்தது. ஏடறியாத வரலாற்றின் தொன்மைக் காலத்தில் இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சியும், புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடியும் கண்டம் விட்டுக் கண்டம் நடந்த மனிதனோடு மாடுகளும் நடந்தன. இன்றும் ஜெட் விமானங்களின் இயந்திர உராய்வைத் தடுக்கும், மசகு எண்ணெயில் கலந்திருக்கும் கொழுப்பின் மூலமாக மாடுகளும் மனிதனை ஏந்திப் பறக்கின்றன.

#### மாட்டிறைச்சியின் மகத்துவம்

மாட்டின் வயிறு நான்கு அடுக்குகளாய்ப் பிரிந்து உணவுப்பொருளைக் கட்டம் கட்டமாக செரிக்



# ஆவின்றி அமையாது உலகு ! நாம் அறிந்திராத மாட்டின் பயன்பாடுகள்

கின்றது. மனிதன் எளிதில் உட்கொள்ள முடியாத, ஆனால் மனித உடலுக்குத் தேவையான பல்வேறு தாவரங்களை மாடு உட்கொள்கிறது. மாட்டிறைச்சியை உண்ணும்போது நாமும் அந்த சக்தியைப் பெறுகிறோம். மேலும் ஏனைய இறைச்சிகள், தாவரங்களைக் காட்டிலும் மாட்டிறைச்சியில்தான் அதிகமான இரும்பு மற்றும் துத்தநாக சக்தியும் இருக்கின்றன. பசலைக் கீரையின் சாறு ஒரு லிட்டரில் இருக்கும் இரும்புச் சத்தைப் பெற மாட்டிறைச்சியின் 90 கிராம போதுமானது.

மேலும் இச்சத்துக்கள் மனிதனது வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும், உடற்சக்திக்கும், சோர்வின்மைக்கும், நினைவுத்திறனுக்கும் அவசியமானவை. அடுத்து, இச்சத்துக்களை தாவரங்களிலிருந்தே பெறலாமென சைவ உணவு வெறியர்கள் வாதிடுகின்றனர். உண்மை என்னவென்றால் தாவரங்கள் மற்றும் அதன் மருந்து வகைகளிலிருந்து மனித உடல் 3 சதவீதத்தை மட்டுமே உறிஞ்சிக் கொள்கிறது. ஆனால் மாட்டிறைச்சியிலிருந்து 23 சதவீத சத்தை நமது உடம்பு ஏற்கிறது. மேலும் அன்றாடம் மாட்டிறைச்சியை உண்ணும்போது நமது உடல் தாவரங்கள் மற்றும் அதன் மருந்துகளிலிருந்து மேலதிக சக்தியை உறிஞ்சும் ஆற்றலையும் பெறுகிறது.

நையாசின், வைட்டமின் டி போன்ற சத்துக்களும், ரத்தத்தின் சிவப்பணுக்களை விருத்தி செய்து நரம்பு மண்டலங்களைப் பாதுகாக்கும் வைட்டமின் 12 (இந்த வைட்டமின் ஏனைய தாவரங்களிலும், விலங்குகளிடமும் அதிகம் கிடைக்காத ஒன்று) மாட்டிறைச்சியில் அபரிமிதமாக கிடைக்கின்றன.

வாழ்க்கை முழுவதும் அரைப்பட்டினி நிலையிலேயே வாழும் தலித் மக்களின் ஆரோக்கியத்தை ஓரளவேனும் பராமரிப்பது மாட்டிறைச்சியே என்றால் மிகையல்ல. உண்மையில் தரமான மாட்டிறைச்சியை குழந்தைப் பருவம் முதல் சாப்பிட்டு வந்தால் இந்திய மக்களின் சராசரி உடல் எடை, உயரம் அதிகரிப்பதோடு, நோயற்ற வாழ்வும் ஆயுள் சராசரியும் வெகுவாக நீளும். பசு புனித மென்ற பெயரில் பார்ப்பனியம் நமது உடல் நலனுக்கு எவ்வளவு பெரிய தீங்கிழைத்திருக்கிறது என்பதை அறிக.

இதுவரை சைவமென்று நினைத்துக் கொண்டிருக்கும் பல்வேறு உணவுப்பொருட்களில் மாடு உள்ளது. மாட்டு எலும்பிலிருந்து தயாரிக்கப்படும் ஜெலட்டின் என்ற புரதக் கூழைச் சேர்த்தே ஐஸ் கிரீம், இனிப்புத் தயிர்க்கட்டி (யோகர்ட்) தயாராகிறது. மேலும் சாக்லேட், சூயிங்கம், பழச்சாறு, ஒயின், பீர், பிஸ்கட் வகைகளிலும் மாடு கலந்திருக்கிறது. மனிதனால் செரிக்க முடியாத மாட்டின் பாகங்கள் கால்நடை, செல்ல விலங்கு, கோழி, மீன் ஆகியவற்றின் தீவனமாக நுகரப்படுகிறது.

உலகின் சர்க்கரை நோயாளிகளில் அதிகம் பேர் இந்தியாவில் தான் வாழ்கிறார்கள். சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் மருந்து மாட்டின் கணையத்திலிருந்தே தயாரிக்கப்படுகிறது. ஒவ்வாமை, மூட்டு முடக்குவாதம் மற்றும் நுரையீரல் நோய்களுக்கான ஹெபரின் மருந்து, தைராய்டு சுரப்பிகளை இயங்க வைக்கும் தைராபிடின், டெட்டனஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் பாரா தைராய்டு ஹார்மோன்கள், அறுவைச் சிகிச்சையின்போது ரத்தப்பெருக்கை குறைத்து உறைய வைக்கும் க்ளுகோன், காயங்களை சுத்தம் செய்யும் ட்டிரிப்ஸின் மற்றும் குரோமோட்டிப்சின், புண்களின் சீழை வடிய வைக்கும் டி அக்ஸி ரைபோ நியூக்கிலியேஸ் இருதயத்தின் ரத்த அடைப்பை நீக்கும் பிப்ரிநோலெஸிக் போன்ற அரிய மருந்துகளையும் மாடு அளிக்கின்றது.

மேலும் எய்ட்ஸ் நோய்க்கு பயன்படும் பிடல் காஃப் சீரம் புற்றுநோய் சிகிச்சைக்கான ஆல்புமின் ஆகியவற்றையும் மாடு தருகின்றது. பசுவை புனிதத்தின் பெயரில் ஒதுக்கி வைத்தால் அவ்வரிய மருந்துகள் கிடைக்காது என்பதோடு, ஏழைகளே மிகவும் பாதிக்கப்படுவர்.

**தோல் பொருட்கள்**

அதிகமான கால்நடைகள் வாழும் இந்தியா இயல்பாகவே தோல் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது. காலணி, கைப்பை, பெட்டி, பர்ஸ், தொப்பி, பெல்ட், துணிவகை, செல்போன் உறை, கார்

இருக்கை உறை, இடுப்பு பட்டைகள் முதலானவை மாட்டின் பங்களிப்புகளாகும்.

**அழகு சாதனப் பொருட்கள்**

மாடின்றி அழகு சாதனப் பொருட்கள் ஒன்று கூட தயாரிக்க முடியாது. முகச்சவர கிரீம்கள், லோசன்கள், குளியல் மற்றும் சலவை சோப்புகள், சிவப்பழகு களிம்புகள், பற்பசைகள், மணம் வீசும் செண்டுகள், கூந்தலைப் பராமரிக்கும் ஷாம்புகள், தலைக்குப் பூசப்படும் பல வண்ணச் சாயங்கள் அனைத்திலும் மாடு இருக்கிறது.

**இதரப் பயன்பாடுகள்**

பெயிண்ட், ரஸ்டம்பர், பிளைவுட், புகைப்படச் சுருள், மெழுகுவர்த்தி, பென்சில்கள், கோட்டு பட்டன்கள், இசைக்கருவி நரம்புகள், டயர், மசகு எண்ணெய், கிரீஸ், பிளாஸ்டிக் சிமெண்ட் அச்சுகள், வெடிமருந்து, உரம், அச்சு மை, தாளின் வழவழப்பு, சலவை நோட்டின் விறைப்பு, தீயணைப்புப் பொருட்களின் நுரை ஆகியவற்றில் மாட்டின் பாகங்கள் சேர்க்கப்படுகின்றன. ஒவ்வொருவர் வீட்டிலும் சரி, ஒவ்வொருவரின் அன்றாட வாழ்க்கையிலும் சரி, மாடு இல்லாமல் எவரும் வாழ முடியாது.

ஒருவேளை மதவெறியர்கள் இப்படியும் கூறலாம்: "இது வரை மாட்டின் மூலம் கிடைக்கின்ற மருந்துகள், பொருட்களை அறியாமல் பயன்படுத்தி விட்டோம்.

இனி மறந்தும் கூடப்பயன்படுத்த மாட்டோம்", அப்படி உறுதியாகப் பின்பற்றினால் மதவெறி அமைப்புகளை இந்த மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கி எறியும் பணியை நாம் செய்ய வேண்டியதில்லை. கோமாதாவே பார்த்துக் கொள்ளும்.

ஸ்பார்ட்டகஸ்

நன்றி: புதிய கலாச்சாரம், அக்டோபர் 2003.


## குணமடைய வாருங்கள்!

AKBAR PONNANI
Kerala Manthrigam
Ali Akbar Haji

செல்: 9840551221
ஃபோன்: 044 24807611 / 24812029



குடும்பத்தில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வீடு சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் கணவன்-மனைவி ஒற்றுமை நிலவ, குழந்தைப் பாக்கியம் பெற, குழந்தைகளுக்கு தோஷம் விலக, காணாமல் போனவர்கள் கிடைக்க, திருமணத் தடை நீங்க, குடிப்பழக்கம் அகல, கால் எரிச்சல், கால் வலி, மூட்டு வலி, இடுப்பு வலி, நெஞ்சு படபடப்பு, நெஞ்சு வலி, கழுத்து வலி, தலை பாரம், தூக்கமின்மை, ரகசிய நோய் போன்ற அனைத்து வியாதிகளுக்கும் நிவாரணம் பெறவும், வியாபாரம் செழிக்க, தொழில் சம்பந்தமான பிரச்சினை, வெளிநாட்டுப் பயணத் தடை நீங்க, கைவிஷம் எடுக்க, வாதத்தால் கைகால் இழந்தவர்களுக்கு, சூனியத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பேய், பிசாசுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, குழந்தைகளுக்கு, மறதி நோய் விலக போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கு அணுகவும்.

**ஞாயிறுதோறும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும்**

இன்ஷா அல்லாஹ் எல்லா மாதமும் கடைசி வியாழன்

**ஷைக் முஹயத்துன் (ரஹ்)** அவர்களின்

குத்துபியத் நடைபெறும்

**காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை**

எண். 10 /14, வெள்ளாளர் தெரு, பெஸ்ட் ஆஸ்பத்திரி அருகில், கோடம்பாக்கம், சென்னை 600 024.

# காணத் தவித்தொரு பாடலிசைக்கின்றோம்

தரா – கார்த்திகை



**க**ரும்புலி என்றொரு முகவரி காண்கையில்
போற்றி மகிழ்ந்தொரு பாடலிசைக்கின்றோம்
மண்ணிலிருந்தொரு காதல் புரிகின்றோம் – ஈழ
மண்ணே
உன்னைத் தொழுது நாம் மெல்லப் பணிகிறோம்.

நல்லதோர் நலம்பெற நல்வழி சென்றவர்
நம்நிலம் போற்றிட நல்வழி சென்றவர்
நல்லதோர் வழிதனை நாடி நடந்தவர்
நாலு திசையிலும் காற்றில் கலந்தவர்.

அன்னையே தேசமாய் அள்ளி அணைத்தவர்
என்னையும் உன்னையும் எண்ணி நடந்தவர்
எப்பொருள் காண்கையில் எண்ணாது போனவர்
நற்பொருள் ஈழமாய் எங்கும் நிறைந்தவர்.

கோடை மறந்தனர் கானல் எழுந்திட
தாகம் மறந்தனர்
தேசம் வாழ்வுற தேகம் தொலைத்திட
தேசம் சுமந்தனர்
மாரி மறந்தனர் மழை கொட்டி மகிழ்ந்திட
காரில் நடந்தனர்.

காலிப் பெழந்தொரு காட்சி புரிகையில்
காற்றில் கலந்தொரு மாலை அணிந்தனர்
மங்கும் பொழுதெழ மெல்ல நடந்தனர்
மேட்டு நிலங்களில் காத்துக் கிடந்தனர்
விடிகாலைப் பொழுதினில் வீரப் புதல்வனாய்
வாழ்வையழித்தொரு வேள்வி முடித்தனர்.

மறம் மறந்தனர்
மண்ணே எங்கள் மாதா என்றனர்
வேதம் மறந்தனர்
வேண்டுமே ஈழம் என்று முழங்கியே
சென்று வெடித்தனர்.

கேசம் மறந்தனர்
சீவி அழகுற வைக்க மறந்தனர்
கோத மறந்தனர்
தம் மென்விரல் கொண்டு கோத மறந்தனர்
நற்செய்தி கிடைத்ததும்
நேரே சென்று வெடித்துச் சிதறினர்.

வானம் மறந்தனர்
வண்ண அழகினைப் பார்க்க மறந்தனர்
வாசம் மறந்தனர்

வீரத் தமிழரின் வாழ்வை நினைத்தனர்
சென்றொரு வாளாய் வென்று முடித்துப்பின்
வான் நின்று கழித்தனர்.

ஊரை நினைத்தனர் உறவை அணைத்தவர்
பாரில் தமிழினம் பூத்து மலர்ந்திட
வேரில் தழைத்தொரு செங்கொடி தாவிட
பாதகர் குகையினை பீறிச் சரித்தனர்.

நாரை மறந்தனர்
நல்லதோர் தோப்புக் கூரை இழந்தனர்
பூவும் இழந்தனர்
குஞ்சுப் பருவத்து கூடும் இழந்தனர்
சுகப் பாடலாய் எங்களின் காதில் ஒலித்தனர்.

தூக்கம் மறந்தனர்
தூங்கும் சுகமதை மெல்ல மறந்தனர்
சுற்றித் திரிந்திடும் நாசிப் படைகளை
வெட்டிச் சரித்துப் பின்
கண்கள் மூடியே மண்ணில் கலந்தனர்
அன்னை மடியிலே மெல்லச் சரிந்தனர்.

ஏக்கம் தொலைத்தனர்
சாவு அடைந்திடும் ஏக்கம் தொலைத்தனர்
சாவினைக் காலால் எட்டி உதைத்தொரு
சரித்திரம் பூண்டு வாழ்ந்து முடித்தனர்.

காதல் மறந்தனர்
கன்னிப் பருவத்துக் காதல் மறந்தனர்
இறக்கை விரித்தொரு பாடல் இசைக்கையில்
மண்ணை நினைத்ததை தானம் அளித்தனர்
விண்ணை உடைத்தொரு வெளிச்சம் பிடித்தனர்.

தம்மை மறந்தனர்
தங்கமாய் போற்றும் தம்மை மறந்தனர்
தம்முடல் கொண்டு சிங்களம் வென்று
பொன்னுடல் வெந்திட வென்று மகிழ்ந்தனர்
வாசலில் தீபமாய் நின்று எரிந்தனர்.

அச்சம் தொலைத்தனர்
அஞ்சிய வாழ்வில் பிச்சை கோரிய
பாத்திர பூமியை காலில் மிதித்தனர்
காத்திர வீரனாய் காவல் புரிந்தனர்
காலைக் கதிரென மண்ணில் மலர்ந்தனர்.

வாசம் மறந்தனர்
வாசனை வீசிடும் பூக்களின் காற்றினை
முகர மறந்தனர்
மண்ணை நினைத்தனர்
வென்று பணிந்தனர்
மண்ணில் எழுந்திடும்
வீர சுதந்திரக் காற்றை முகர்ந்தனர்.

நெய் விளக்கேற்றுகிறோம் நம்பியிருக்கிறோம்
நிந்தனை செய்தொரு பாடல் படிக்கிறோம்
பொன்மலர் பாதங்கள் போற்றிப் பணிகிறோம்
நின்மலர்ப் பாதங்கள் காணத் தவிக்கிறோம்
கும்பிட்டுக் கோவிலாய் கட்டியிருக்கிறோம்
மணிகள் ஒலிக்கிறோம்
கார்த்திகை பூக்களில் மாலை தருகிறோம்
வார்த்தைகள் இல்லை
வந்து தொழுகிறோம்

மண்ணில் நிமிர்ந்தொரு புன்னகை தாரீர்
மண்ணில் எழுந்தொரு காட்சியும் தாரீர்
அன்பின் உறவுகள் கூடித் தவிக்கிறோம்
ஆசை முகங்களை காணத் தவிக்கிறோம்.

கரும்புலி பொக்கிசச் செல்வங்களே
இரும்பொலி ஆகிய தெய்வங்களே
வரும்பகை எங்கணும் வெந்து தணிந்தொரு
தண்மை மலர்களின் பிள்ளைகளே

மண்ணில் நிமிர்ந்தொரு புன்னகை தாரீர்
மண்ணில் எழுந்தொரு காட்சியும் தாரீர்
காணத் தவித்தொரு பாடல் இசைக்கின்றோம்.



தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்




7

# 13 ஆவது சட்டத்திருத்தம்

தமிழ்நாட்டில் தமிழ்த் தலைவர் ஒருவர் மேடையில் ஏறி நின்று தமிழ்நாடு என் தாயகம் என்று சொல்ல முடியும். சிறீலங்காவில் சிங்களத் தலைவர் ஒருவர் மேடையில் ஏறி நின்று சிறீலங்கா என் தாயகம் என்று சொல்லமுடியும். தமிழீழத்தில் தமிழ்த்தலைவர்கள் ஒருவர் மேடையில் ஏறி நின்று தமிழீழம் என் தாயகம் என்று சொல்ல முடியுமா.

தாயகத்தின் பெயர் சொல்ல முடியாத தமிழ்த் தேசிய இனமாய் உலகில் நாம் தலை குனிந்து தாழ் வுற்று நிற்கிறோம்.

இப்போதாவது கூறுங்கள் தமிழீழத்துக்கு விடுதலை தேவையா இல்லையா?

13ஆவது அரசியல் சட்டத்திருத்தமும் மாகாண சபைகளும்

ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைத் தந்தை செல்வா 1949இல் தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய போதே ஒதுக்கித் தள்ளினார்.

தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிக்கும் கொலைகார அரசியல் அமைப்பு இது என்றார் தந்தை செல்வா.

கூட்டாட்சி அரசியல் அமைப்பைக் கொண்டு வாருங்கள் என்றார் 1976 வரை 27 ஆண்டுகள் கூட்டாட்சி கேட்டுக் குரல் எழுப்பினார் போராடினார்.

நிகழ்ந்த அறவழிப் போராட்டங்கள் அனைத் தும் தோற்ற நிலையில் 1975இல் வட்டுக்கோட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் இறை யாண்மை கொண்ட தனித்தமிழீழ அரசே இனி எங்கள் கொள்கை எனத் தந்தை செல்வா தீர்மானம் நிறைவேற்றினார்.

இரு தேசிய இனங்கள் வாழும் இலங்கைத் தீவில் ஒரு தேசிய இனத்தில் (பெரும்பான்மைச் சிங்கள இனம்) கையில் ஆட்சி அதிகாரத்தை வழங்கியி

ருக்கும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை இற்றை வரை தமிழீழ மக்கள் ஏற்றதே இல்லை.

13ஆவது அரசியல் சட்டத்திருத்தம் இன்று தமிழ்த் தேசிய இனத்தை அழிக்கும் இன்னொரு படைக்கருவியாய் நம்மீது பாய்தலைப் பார்க்கிறோம்.

13ஆவது அரசியல் சட்டத் திருத்தம் ஒற்றை யாட்சி அரசியல் அமைப்போடு இணைந்த ஒரு பகுதியே ஆகும்.

13ஆவது அரசியல் சட்டத்திருத்தம் என்பது இலங்கை அரசியல் அமைப்பின் ஒற்றையாட்சித் தன்மையைப் போக்கிக் கூட்டாட்சித் தன்மையைக் கொண்டு வருவதற்காக உருவாக்கப்பட்டதல்ல இலங்கை ஒற்றையாட்சித் தன்மைக்கு இது எதிரானதல்ல என்று இலங்கையின் உச்ச அற மன்றம் (நீதிமன்றம்) தீர்ப்பளித்திருக்கிறது.

முதலில் 13ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தில் சொல்லப்பட்டுள்ள வடக்கு கிழக்கு இணைப்பு என்னும் சொல்லாட்சி சரியா? பிழையா? என்பதை முடிவு செய்வோம்.

இந்திய அரசியல் அமைப்பில் சென்னை கோவை மதுரை திருச்சி நெல்லை இணைப்பு என்று எங்காவது சொல்லப்பட்டிருக்கிறதா? தமிழர் களின் மொழிவழித் தாயகமான தமிழ்நாட்டின் பெயரே கையாளப்பட்டிருக்கிறது இல்லையா? ராஜீவ் செயவர்த்தனா உடன் படிக்கையில் மட்டும், வடக்கு கிழக்கு இணைப்பு சொல்லாட்சியைத் தவிர்த்து தமிழீழம் என்னும் தமிழீழ மக்களின் தாயகப் பெயரைப் பயன்படுத்த நீங்கள் தவறியது ஏன்?

தமிழீழம் என்னும் தமிழர் தாயகத்தின் பெயரை இலங்கை அரசியல் அமைப்பில் சட்டத்திருத்த நிலையிலாவது இணைக்க நீங்கள் தயங்குவதன் உள்நோக்கம் என்ன?

வடக்குகிழக்கு இணைப்பு கிழக்கு மாகாண மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தி முடிவு செய்யப்படும் என்று 13ஆவது அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறதே இது வடித்தெடுத்த வஞ்ச னையா? இல்லையா?

ஒரு தேசிய இனத்தின் பல்லாயிரம் ஆண்டு கால வரலாறே அத்தேசிய இனத்தின் தாயகம் எது என்பதை உறுதி செய்யுமே தவிர கருத்துக் கணிப்பைக் கொண்டு வந்து இங்கே ஒட்டுவது என்ன அரிசியலோ எனக்குத் தெரியவில்லை.

ஏற்கெனவே சிங்கள சிறீலங்காவின் அறமன்றம் (நீதிமன்றம்) வடக்கு கிழக்கு இணைப்புச் செல்லாது எனத் தீர்ப்பளித்திருக்கிறது.

வடக்கில் இருந்து கிழக்கை முற்றாகத் துண்டித்து தமிழர் தாயகத்தைச் சிதறடிக்கும் நோக்குடன் 1948 தொடக்கம் கிழக்கில் நடைபெற்றுவரும் திட்டமிட்ட சிங்களர் குடியேற்றத்தை வரலாறு முன்பே பதிவு செய்திருக்கிறது.

அண்மையில் வழங்கப்பட்ட இலங்கை உச்ச அறமன்றத் தீர்ப்பு (உச்சநீதிமன்றம்) நில உரிமை அதிகாரம் மாகாண சபைக்கு இல்லை என அடித்துக் கூறுகிறது.

இந்த உச்ச அறமன்றத்தின் தீர்ப்பு தமிழீழத்தில் தொடர்ந்து சிங்களவர்களை அரசு குடியேற்றுவ தற்கு இடமளித்திருக்கிறது என்பதை மறந்துவிடா தீர்கள்.

13ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின் கீழ் அமையும் மாகாணசபை பயனற்றதாகும்.

தமிழீழத்தில் வடக்கிலோ கிழக்கிலோ அமையும் மாகாணசபையில் சிங்களவரான ஓர் ஆளுநரே முழு அதிகாரம் படைத்தவராக இருப்பார் தமிழர்களான முதல் அமைச்சரும் பிற அமைச்சர்களும் பொம் மைகளாகவே இருப்பார்கள்.

இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் இருந்த போது வடக்கும் கிழக்கும் இணைந்து அமைந்த மாகாண சபையில் முதல் அமைச்சராக இருந்த வரதராசப்பெருமாள் கூறியதை இங்கே பதிவு செய்கிறேன்.

'அலுவலகத்தில் எனது பயன்பாட்டுக்கு நான் ஒரு நாற்காலி வாங்குவதானாலும் கொழும்புக்குப் போய் நடுவண் அரசிடம் கெஞ்சிக்கேட்டு ஒப்புதல் பெறவேண்டி இருக்கிறது?

என்று அழுதார் பெருமாள்.

இதுதான் 13 ஆவது அரசியல் சட்டத்திருத்தம் இதுதான் ஒன்றுமே இல்லாத ஒன்றுக்கும் உதவாத மாகாணசபை.

தமிழர்களின் ஏக்கத்தை எதிர்பார்ப்பை ஈடு செய்யும் சட்டம் அல்ல தமிழர்களின் தேசிய இனத் தன்மைக்கும் தமிழீழத்துக்கும் கேடு செய்யும் திட்டம்.

# கம்பரை கவியால் மடக்கிய விவசாயி

சங்க காலத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கும், கிராம விவசாயியான நீர்ப்பாய்ச்சல்காரருக்கும் நடந்த ஒரு உரையாடல் சுவாரசியமானது. கிண்டலும், கேலியும் கலந்த அந்த உரையாடலுக்கு பிறகு கம்பர் சேர நாடு நோக்கி தனது பயணத்தை தொடர்ந்தார். அதுகுறித்த சுவாரசியமான தகவல் இதோ...

மன்னர் குலோத்துங்க சோழன், அம்பிகாபதி அமராவதி காதலால் மனம் நொந்து, சூழ்ச்சி செய்து அம்பிகாபதியைக் கழுவிலேற்றி கொன்றார். இதனால் மனம் வருந்திய அம்பிகாபதியின் தந்தையான கவிச்சக்கரவர்த்தி கம்பர், இனி சோழ நாட்டில் இருக்க வேண்டாம் என்று நாட்டை விட்டு வெளியேறினார். அவ்வாறு வெளியேறிச் செல்லும் வழியில் சிவகங்கைச் சீமை பகுதிக்கு கம்பர் வந்தார்.

நல்ல வெயில், களைத்து போன கம்பர் ஒரு குளத்தின் அருகே வந்தார். கரையில் புது மணத்தம்பதிகளான நீர்ப்பாய்ச்சல்காரரும், அவரது மனைவியும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கரைக்கு அருகே இருந்த வயல்வெளி கம்பரின் மனதை மயக்கியது. நன்கு விளைந்த நெற்கதிர்கள், குளத்தில் நாரை, கொக்குகள் நீந்தின. பசும் புல்லை ஆடு, மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. பசுமையான அந்த இடத்தில் கவிச்சக்கரவர்த்தியின் மனம் லயித்தது.

நன்கு விளைந்த நெற்கதிரை கம்பர், 'பெண்ணாய் பாவித்து' கவி பாடத்தொடங்கினார். 'அடடா, இவள் நல்ல பருவம்' என்றார். இதை அருகில் புது மனைவியுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த நீர்ப்பாய்ச்சல்காரர் கேட்டு, நமது மனைவியைத் தானே இவர் கூறுகிறார் என நினைத்து, 'பருவம் என்ன பருவம்...அது அறுத்துக் கட்டும் சாதி அய்யா' என்றார். அதற்கு கம்பர், 'அறுத்துக் கட்டினாலும் களம் ஏறுவாள் அல்லவா?" என எதிர்ப் பாட்டு பாட, களம் ஏறினாலும் அடிபடுவாள் அய்யா' என்றார் நீர்ப்பாய்ச் சல்காரர்.



அதற்கு கம்பர், அடிபட்டாலும் பொலி ஏறுவாள் அல்லவா? என கேள்வி கேட்க, பொலி ஏறினாலும் அளபடுவாள் அய்யா என்று பதிலுரைத்தார். அதற்கு கம்பர், அளபட்டாலும் மச்சு ஏறுவாள்

*அல்லவா?" என்று சொல்ல, அதற்கு நீர்ப்பாய்ச்சல்காரர், மச்சு ஏறினாலும் குத்துப் படுவாள் அய்யா என்றார்.*

*உடனே கம்பர் 'குத்துப்பாட்டாலும் குடி காப்பாள் அல்லவா?" என்று எதிர்க்கேள்வி போட, குடி காத்தாலும் குப்பைக்கு போய் விடுவாள் அய்யா என்று சளைக்காமல் பதிலுரைத்தார் நீர்ப்பாய்ச் சல்காரர்.*

*இப்போது கம்பர் யோசித்து, நீர்ப்பாய்ச்சு கிறவனே இந்தளவிற்கு எதிர்க் கவி பாடுகி றானே...இந்த ஊரில் இருப்பவர்கள் எந்த அளவிற்கு கவி பாடுகிறவர்களாக இருப்பார்களோ என்று எண்ணி, இனி இந்த வழியே செல்ல வேண்டாம், அருகில் இருக்கும் வேம்பத்தூருக்கு செல்வோம் என சட்டென்று முடிவெடுத்து, வேம்பத்தூருக்கு இந்த பக்கம் தானே செல்ல வேண்டும்? என வழிகேட்டு அந்த வழியே நடையைத் தொடங்கினார்.*

*ஒரு வழியாய் கம்பர் வேம்பத்தூரை நெருங்கி விட்டார். அங்கே பாதையில், ஒரு சிறுவன் திண்டு கல்லின் மீது அமர்ந்திருந்தான். அந்த சிறுவன், அருகில் வரும் கம்பரை சிறிதும் கண்டு கொள்ள வில்லை. வயதில் மூத்த தன்னைப் பார்த்து ஒரு மரியாதைக்கு கூட வணக்கம் சொல்லாமல் அமர்ந் திருந்த சிறுவன் மேல் கம்பர் கோபம் கொண்டார். உடனே அந்த சிறுவனைப் பார்த்து, சிறு வேம்பும் கசக்குமோ? என அச்சிறுவன் காதில் படும்படி சொன்னார். அதற்கு அந்தச் சிறுவன், 'வேம்பில் சகலமும் கசக்கும் அய்யா என சட்டென்று பதிலுரைத்தான்.*

*அந்த சிறுவனிடம் இருந்து இப்படி தெளிவான பதிலை எதிர்பார்க்காத சூழலில் கம்பர் திகைப்புற்று, வேம்பத்தூரிலும் கவி பாடுகிறவர்கள் இருப்பார்கள் போல் இருக்கிறது. சிறுவனே இந்தளவிற்கு எதிர்க்கவி பாடினால் அங்கிருப்ப வர்கள் இன்னும் அதிக கவித்துவம் உள்ளவர்களாக இருப்பார்கள். எனவே வேம்பத்தூருக்குச் செல்ல வேண்டாம் என சட்டென்று முடிவெடுத்தார். அதன்பிறகே அவர் சேர நாட்டுக்கு சென்றார்.*

***க. முத்து,*** *தலைமை ஆசிரியர் (பணிநிறைவு)*
*பாலகவுண்டன்பட்டி*

# மக்கள் தொலைக்காட்சி

## மண் பயனுற வேண்டும்


**தொ**லைக்காட்சிகள் தமிழர் பண்பாட்டை கெடுத்துக் கொண்டிருக்கின்றனவே என்ற ஆதங்கத்தில் மருத்துவர் இராமதாசு அவர்கள் நல்ல தமிழ்த் தொலைக் காட்சி ஒன்றை ஆரம்பித்து, அதற்கு மக்கள் தொலைக் காட்சி என்று பெயரிட்டு மிக அருமையான நிகழ்ச்சி களைத் தந்து கொண்டிருந்தார். தமிழ்த் தொலைக்காட்சி வரலாற்றில் ஒரு திருப்பு முனையை, நல்ல தாக்கத்தைத் தந்தது மக்கள் தொலைக்காட்சி. ஆனால் இப்போது என்ன ஆயிற்றோ தெரியவில்லை. பல நிகழ்ச்சிகள் மாறிப்போய்விட்டன.

மக்கள் தொலைக்காட்சியில் கார்மல் என்பவர் உயர் பொறுப்பில் இருந்தவரை அது சரியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. அவர் புதுயுகம் தொலைக்காட்சிக்குச் சென்ற பின்பு மாற்றங்களும் புகத் தொடங்கிவிட்டன. தற்போது துரைமாணிக்கம் என்பவர் நிகழ்ச்சித் தயாரிப்புகளுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார். இவர் தலைமையிலான தயாரிப்புகளில் பெரும்பாலா னவை மற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தழுவியும் சிவப்புத்தோல் மனிதர்களை முன்னிறுத்தியும் தான் வந்து கொண்டிருக்கின்றன.

பார்ப்பனர் ஆதிக்கம் இல்லாத ஒரே தொலைக்காட்சி மக்கள் தொலைக்காட்சி தான் என்று இருந்த நிலை மாறிப்போய்விட்டது. பாட்டு என்றாலும் பரதம் என்றாலும் அவர்களால் மட்டும்தான் முடியும் என்ற ஒரு தவறான நிலையை மக்கள் தொலைக்காட்சி ஏற்றுக் கொண்டது போல் தெரிகிறது.

மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை எல்லாம் மருத்துவர் கவனிக்கிறாரா? அல்லது எப்படியாவது நடக்கட்டும் என்று விட்டுவிட்டாரா! தெரியவில்லை. மருத்துவருக்கும் சரி, பாட்டாளி மக்கள் கட்சிக்கும் சரி பொது மக்களிடம் எக்காலத்திலும் நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தது மக்கள் தொலைக்காட்சிதான். அந்த நல்லபெயர் மாறுவது என்பது பா ம க விற்கு நல்லதல்ல என்பது நடுநிலையாளர்களின் கருத்து. கவனிப்பாரா மருத்துவர்?

# நோய்கள் தீண்டாமல் நலமாக வாழ வழிகள்




1. ஒவ்வொரு நாளும் எட்டுக் குவளை தண்ணீர் குடிக்க வேண்டும்.

2. சாப்பாட்டில் தவறாது இரண்டு காய்கறிகளாவது இடம்பெறும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. உணவுக்குமுன் பச்சையாக நறுக்கிப்போட்ட காய்கறி சாலட் சாப்பிடலாம்.

4. நொறுக்குத்தீனியைத் தவிர்த்து அதற்குப் பதிலாக முளைவிட்ட பட்டாணி, பயறு வகைகளைச் சாப்பிடலாம்.

5. ஒவ்வொரு வேளை உணவையும் ரசித்து, ருசித்துச் சாப்பிட வேண்டும்.

6. காய்கறிகளை பறித்தஉடன் பயன்படுத்த வேண்டும்.

7. சர்க்கரை அம்சம் கொண்ட குளிர்பானங்கள் ஐஸ்கிரீம், சாக்லேட்டுகள், மிட்டாய் வகைகளை உண்ணாதீர்கள்.

8. சமைத்தஉடன் சாப்பிடுவது நல்லது. பிரிட்ஜில் வைத்துச் சூடாக்கிச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

9. உணவில் அவ்வப்போது கீரையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

10. என்றேனும் ஒருநாள் முழு உண்ணாநோன்பு இருங்கள். பழரசம் சாப்பிடலாம்.

11. காபி, டீ குடிக்கக்கூடாது. குடிக்கவேண்டும் என்று தோன்றினால் பழரசம் குடிக்கலாம்.

12. பொரித்த உணவுகளைத் தவிர்த்திடுங்கள்.

13. வாராத்தில் ஏதாவது ஒரு நாள் காலை சிற்றுண்டிக்குப் பதில் பழங்கள் உண்ணலாம்.

14. உணவுக்கட்டுப்பாடு என்று கூறி உணவைத் தியாகம் செய்யக்கூடாது.

15. சோடா, கோலா போன்ற பானங்களை அருந்தக்கூடாது.

16. நார்ச்சத்துள்ள காய்கறி பழங்களை உட்கொள்ள வேண்டும்.

17. உப்பை குறைவாக பயன்படுத்த வேண்டும்.

18. குழந்தைகளுடன் குழந்தைகளாக விளையாட வேண்டும்.

19. காய்கறிகளை வேகவைத்துச் சாப்பிடுவதே நல்லது.

20. சமைக்கும்போது உருளைக்கிழங்கு, வெள்ளரிக்காய், கேரட், தக்காளி போன்றவற்றின் மேற்புறத் தோலை நீக்கக்கூடாது.

21. உண்ணும் உணவில் தேவையான கலோரிகள், புரதச்சத்துக்கள் இருக்க வேண்டும்.

22. அவசர அவசரமாக உண்ணாதீர்கள்.

23. தியானத்திற்கும் பிரார்த்தனைக்கும் தினம் 20 நிமிடங்கள் ஒதுக்குங்கள்.

24. உண்ணும் உணவில் உள்ள சத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

25. எந்த உணவுப்பொருளானாலும் நீங்களே சோதனை செய்து வாங்கங்கள்.

26. உணர்வுகளுக்காக உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணாதீர்கள்.

27. சிப்ஸ் கொறிக்காதீர்கள்.

28. உண்ணும் போது வேறு எதிலும் கவனம் செலுத்தாதீர்கள்.

29. குடும்பத்தாரும் சேர்ந்து உண்ணுங்கள்.

30. மூச்சுப்பயிற்சி செய்யுங்கள்.

31. வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். நன்றாக சிரியுங்கள்.

32. மது அருந்தாதீர்கள்.

33. நல்ல மனநிலையுடன் படுக்கைக்குச் செல்லுங்கள்.

34. மற்றவர்களைப் பொருட்படுத்தாது உடற்பயிற்சி செய்யுங்கள்.

35. தினமும் நடைப்பயிற்சி செய்யுங்கள்.

36. காலையும் மாலையும் உடற்பயிற்சிக்கு பத்து நிமிடங்களாவது ஒதுக்குங்கள்.

37. மாடிப்படிகளில் ஏறிச்செல்லுங்கள்.

38. தினமும் தியானம் செய்யுங்கள்.

39. மூச்சு முட்ட சாப்பிடக்கூடாது.

40. ஓய்வு கொடுப்பது உடலுக்கு நல்லது.

41. காலையில் வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்து குடிப்பது நல்லது.

42. புகை பிடிக்காதீர்கள்.

43. ஆழ்மன ஆற்றலைப் பயன்படுத்துங்கள்.

44. வேலையையும் ஓய்வையும் சரியாக நிர்ணயம் செய்ய வேண்டும்.

45. காய்கறிகளை சமையலுக்குப் பயன்படுத்தும் முன் நன்றாக தண்ணீரில் கழுவ வேண்டும்.

46. நண்பர்களை அடிக்கடி சந்திப்பது நல்லது.

47. பிறரது தவறுகளை மன்னிப்பது நல்லது.

48. தினமும் குடும்பத்தினருடன் அரட்டை அடியுங்கள்.


49. ஒவ்வொரு நாளும் குறைந்தது 15 நிமிடங்கள் இசை கேளுங்கள்.

50. நல்ல புத்தகங்களைப் படியுங்கள். வாரம் ஒரு புத்தகமாவது படியுங்கள்.

சாப்பிடும்போது தரையை பார்த்து சாப்பிடுகிறோம் பூமித் தாய்க்கு நன்றி சொல்ல!

தண்ணீர் அருந்தும்போது வானத்தை பார்த்து அருந்து கிறோம். மேகத்திற்கு நன்றி சொல்ல!

சரக்கு அடிக்கும்போது கண்ணு ரெண்டையும் இருக்கி மூடிட்டுக் குடிக்கிறாங்க. சீக்கிரமே ரெண்டு கண்ணையும் ஒரேபடியாக மூடப்போறாங்கன்றதுக்கு அடையாளமாகவோ!




# உண்மையைத் தேடி

ராசீவ்காந்தி கொலையில் முக்கியப் பங்காற்றிய வர் சுப்ரமணியசாமி என்று திருச்சி வேலுச்சாமி அவர்கள் பல ஆதாரங்களை வெளியிட்டு குற்றம் சாட்டுகின்றார். சுப்ரமணியசாமி சி ஐ ஏ வின் ஏஜெண்டு என்று வர்ணிக்கப்பட்டவர்.

இவர் திட்டம் தீட்டி சதி செய்யும் சதிகாரர் என்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவில் குடியேறியவர் களின் வழித்தோன்றல். இவர் இருக்கும் இடத்தில் நீதி நேர்மை இருக்காது என்றும் எந்த ஒரு குற்றத்தையும் செய்துவிட்டு அதில் பிறரைச் சிக்க வைத்துவிட்டு தப்பிப்பதில் திறமையானவர் என்றும் சொல்கிறார்கள். பலகோடி ரூபாயைப் பெற்றுக் கொண்டு விடுதலைப்புலிகள் தான் கொன்றார்கள் என்று அப்பாவி தமிழ் மக்களை ராசீவ் கொலையில் சிக்க வைத்து தப்பித்துக் கொண்டவர் இவர் என்றும் கூறுகிறாாகள்.

குமரிக்கண்டம் என்ற நிலப்பரப்பு 3000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது என்பது ஆய்வு தரும் உண்மை. தமிழ்நாடு இலங்கை இணைந்த ஒரு நிலப்பரப்பாக இருந்திருக்கிறது. இலங்கையை தமிழ் மன்னர்கள் சிறப்பாக ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். தென் மதுரையில் தமிழ்ச் சங்கங்கள் வளர்த்த மன்னர்கள் தமிழை வளர்த்த முறை பற்றி பல நூல்கள் எடுத்துரைக்கின்றன. இப்பகுதி பிற்காலத்தில் நீரில் மூழ்கிவிட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தமிழ்நாட்டின் ஒரு பகுதியான இலங்கை ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்புவரை தமிழர்களால் ஆளப்பட்டு வந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இன்று தமிழர்கள் இன அழிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். இலங்கை தமிழ்நாட்டுடன் இணைந்த பகுதி என்பதை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருந்த ஆசியாவின் புகழ்மிக்க யாழ்ப்பாண

9 • இராஜாசிங்

நூலகம் 1981 ஆம் ஆண்டு சிங்களக் காடையர் களால் அழிக்கப்பட்டது.

தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆண்டனர் என்ற தெளிவான வரலாறு இருக்கின்றது. சான்றுகள் பல நிறைந்த யாழ்ப்பாண நூலகத்தை அழித்தபின்பும் மற்ற தரவுகளின் மூலம் இன்றும் அது உண்மை என்று தெளிவாகிறது. இப்படி இருக்க, இலங்கையை இராமர் அழித்தார் என்று கூறுவதும் நடக்கிறது. அப்படி என்றால் தமிழர் களை இராமர் அழித்தாரா? இவைகளை எல்லாம் தேர்தல் நேரத்தில் பெரியார் வழி நிற்பவர்களும் அம்பேத்கர் வழி நிற்பவர்களும் கேள்வி கேட் பார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்பதனால், இந்து மதம் என்று சொல்லி தங்களை காப்பாற்றிக் கொள்ள மற்ற மக்களை குறிப்பாக தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் ஐ ஐ டி யில் பெரியார், அம்பேத்கர் வாசகர் வட்டம் என்ற மாணவர் அமைப்பை தடை செய்திருக்கி றார்கள்.

இராசீவ்காந்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கருத்தும் சிந்தனையும் கொண்டவர். அவர் இந்தியத் திருநாட்டின் பாரதப் பிரதமர். அவரை எதிர்த்து அமெரிக்கா தன் செல்வாக்கினை ஆசியப்பிரதேசத்தில் செலுத்து முடியாது என்று எண்ணி, அமெரிக்காவின் கைக்கூலியாக இருந்த வர்கள் இலங்கையின் ஆதரவுடன் இராசீவ் காந்தியை கொன்றார்கள் என்பதுதான் உண்மை. இக்கொலையை விசாரித்த விசாரணை அதிகாரிகள் சிவராசன், குமாரன் பத்மநாபன் போன்றோர்தான் முக்கியக் குற்றவாளிகள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த விசாரணைக்கு தலைமையேற்ற சிறப்பு விசாரணை அதிகாரி கார்த்திகேயனோ, மேற்கண்டவர்கள் விடுதலைப் புலி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறி இப்பழியை விடுதலைப்புலிகள் மீது போட்டு இராசீவ் காந்தி கொலையைத் தமிழர்கள் தான் செய்தார்கள் என்று கூறிவிட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மனிதநெறியும் ஒழுக்கமும் கொண்ட இயக்கம். அதில் தவறு செய்பவர் யாராக இருந்தாலும் அவர்கள் உடனடியாக அந்த இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டு தண்டனையும் கொடுக்கப்பட்டிருக்கிறன்றனர். பல உதாரணங்களைச் சொல்லாம். விடுதலைப் புலிக ளின் முக்கியத் தலைவராக இருந்த கருணா நீக்கப் பட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் யாழ்ப்பாணத்திலிருந்தும் நீக்கப்பட்டார். இவர் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் போது இலங்கை அரசுடன் கைகோர்த்துக் கொண்டு காட்டிக் கொடுத்து பல்லாயிரம் தமிழர்கள் அழிவுக்கு காரணமாகிப்போனார் என்பது தமிழ் வரலாற்றில் மிகப்பெரிய வடுவாகும்.

விடுதலைப்புலிகள் முன்பு எந்த உத்தியைப் பயன்படுத்தி தங்கள் இயக்கத்தை வளர்த்தார்களோ அதே உத்தியைப் பயன்படுத்தி கருணா அந்த இயக்கத்தை அழித்தான். அதற்கு இலங்கை அரசும் இந்திய அரசும் துணை நின்றன. விடுதலைப்புலி களாக இருந்தவர்கள் தங்களது நண்பர்களால் ( கருணாவின் ஆதரவாளர்கள் ) கடத்தப்பட்டு இலங்கை இராணுவத்தில் அதிகாரப் பூர்வமாய் அறிவிக்கப்படாத இராணுவ வீரர்க ளாய்ச் சேர்க்கப்பட்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக களம் இறக்கப்பட்டனர். இந்த நயவஞ்சகச் செயலில் ஈடுபட்ட பல இளைஞர்கள் தங்களது நண்பர் களால் (விடுதலைப்புலிகளால்) சுட்டுக் கொல்லப் பட்டனர். இந்தச் சதியினால் தான் புலிகள் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தில் திகைத்து நின்று எதிர்த் தாக்குதல் எதுவும் நடைபெறாமல் புலிகளின் கைகள் கட்டப்பட்டதற்கு இது ஒரு காரணமாய் அமைந்துவிட்டது.

கொலையில் தொடர்பு என்று பேசப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கமும் விடுதலைப் புலிகளும் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டனர். இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு முன்பு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கடைநிலை ஊழியராக இருந்து பின் வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்து இலங்கையில் அமைதி திரும்பி விட்டது என்று தன் சொந்த மண்ணில் வாழ ஆசைப்பட்டு நாடு திரும்பிய பெண் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சூழ்நிலை இப்படி இருக்க, இராசீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட முக்கிய குற்றவாளியான குமாரன் பத்மநாபன் மாத்திரம் எப்படி பாது

காப்பாக, சுதந்திரமாக இலங்கை மண்ணில் சுற்றி வர முடிகிறது? கொலையின் போது இவர் இந்தியா வில்தான் தங்கியிருந்திருக்கிறார். சிவராசன் குறிப் பேட்டில் குமாரன் பத்மநாபன் தங்கி இருந்த இடத்திற்கு சிவராசன் சென்று வந்ததற்கான சாட்சி யமும் இருக்கின்றன. ஆகவே குமாரன் பத்மநாபா (கே.பி) இராசீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட கருணாவும் குமாரன் பத்மநாபன் மாத்திரம் இலங்கையில் எப்படி சுதந்திரமாக வலம் வர முடிகின்றது. இது இலங்கை அரசுக்கும் இராசீவ் காந்தி கொலைக்கும் உள்ள தொடர்பை மிகத் தெளிவாக காட்டுகிறதல்லவா! திரு. பிரபாகரனோ, விடுதலைப்புலிகளின் தலைவர்களோ இதை நாங்கள்தான் செய்தோம் என்று சொல்லவில்லை. நாங்கள் கொல்லவில்லை என்றே கூறிவந்தனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட குமாரன் பத்மநாபன் மட்டும் நான் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறிக்கொண்டு, நாங்கள் தான் கொன்றோம் ( விடுதலைப்புலிகள்) என்று பேட்டி கொடுத்தார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது பலருக்கும் புரிந்திருக்கும் குமாரன் பத்மநாபாவும் கருணாவும் விடுதலைப்புலிகள் அல்ல. அவர்கள் தமிழினத் துரோகிகள் என்று. இவர்களது உண்மை உருவத்தைத் தெரிந்து கொள்ள இருபத்துநான்கு ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

ஜெயின் கமிசன் முன்பாக திருச்சி வேலுச்சாமி ஆஜராகச் சென்றபோது அவரை உள்ளே அனுமதிக்கவில்லை பின்னர் வேலுச்சாமி சோனியா காந்தியை அணுகினார்.

இப்படி இருக்க, காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் அவர்களது தலைவர் கொலையில் உண்மையான குற்றவாளிகளை கண்டறிய ஏன் முயலவில்லை. தங்களது கட்சிக்கும் தலைவிக்கும் ஏற்பட்டு உள்ள வேதனையையும் அவமானத்தையும் நீக்குவதற்கு ஏன் முன்வரவில்லை.

தமிழக காங்கிரஸ் பெருமக்களே, ராசீவ் காந்தியை தமிழன் கொல்லவில்லை, என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைத்து உண்மைக் குற்றவாளிகளை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுங்கள். இல்லை என்றால் சாமி சொல்வது போல் சோனியா காந்திதான் கொன்றார் என்று மக்கள் நினைக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

உண்மையான கொலைக்குற்றவாளி யார் என்பது தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதற்கு ஆலோசனை சொல்லிக்கொடுத்த மீனவர்களைக் கொள்வது, சிறையில் அடைப்பது, மீன்பிடி படகுகளை அழிப்பது, கைப்பற்றுவது. ஜி பி எஸ் கருவி இருந்தால் உண்மை வெளி உலகிற்குத் தெரிந்துவிடும் என்பதற்காக அந்த மீனவர்கள் மீது கஞ்சா வழக்குப் போட்டு பின்னர் சுப்பிரமணிய சாமிக்கு வேண்டிய அரசான பி ஜே பி வந்தவுடன் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு விடுதலை செய்தார்கள். இப்படி இரண்டு மூன்று முறை செய்தால் உலக அரங்கில் தமிழன் கஞ்சா கடத்துபவன் என்ற பெயர் வந்துவிடும். அதன் மூலம் உலகின் பல பாகங்களில் வாழ்ந்து கொண் டிருக்கிற தமிழனை அழித்தொழித்து விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழர்களாகிய நாம் இதையெல்லாம் புரிந்து கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வேண்டும்.

தன் உரிமைக்காகப் போராடிய தமிழ் இனத்தை பூண்டோடு அழித்த தளபதி பொன்சேகாவுக்கு தீவிரவாதிகளை? அழித்ததற்காக விருது கொடுத்து கௌவித்தார்கள். அப்படி என்றால் தங்களது உரிமைக்காக போராடுகிற மக்கள் தீவிரவாதிகளா? சரி. அவர்கள் தீவிரவாதிகள் என்றால் அவர்களை ஊக்கப்படுத்திய, வளர்த்த புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் தீவிரவாதத்தை வளர்த்த வரா? இது புரட்சித் தலைவர் மேலேயே களங்கம் கற்பித்தல் ஆகாதா? இப்படிப்பட்டவர் களை மக்கள் மன்னிப்பார்களா? காங்கிரஸ் இலங்கைத் தமிழர்களை அழித்தது. தற்போதுள்ள அரசோ இந்தியத் தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் சேர்த்தழிக்க வஞ்சக வலையை விரிக்கிறது. உதாரணம் ஆந்திராவில் 20 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்ட நிகழ்வு.

இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தில் தமிழன் அல்லாத ஒரு இந்தியன், இந்தியாவிற்கு வெளியிலோ அல்லது வேறு மாநிலத்திலோ கொல்லப்பட்டால் இந்தியா முழுவதிலும் இருந்து கண்டனக் குரல்கள் எழும்பும். ஆனால், தமிழர்களுக்கோ எங்கும் ஆதரவு இல்லை. தமிழர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரிய தாகவும், கேள்விக்குரியதாகவும் உள்ளது. இதுதான் கூட்டாட்சியின் தத்துவமா?

நடுவண் அரசு தமிழர்களை ஏன் நசுக்குகிறது என்று நாம் ஆழமாகச் சிந்தித்தால், தமிழர் களுடைய மதம், வழிபாட்டு முறைகள், கலை, பண்பாடு என்பதெல்லாம் மிக உயர்வாக இருப்பதுதான். தமிழர்கள் ஆடு, மாடு, பன்றி, கோழி முதலிய நாட்டு, காட்டு விலங்குகளை, பறவைகளை பலியிட்டு இயற்கையைத் தெய்வமாக எண்ணி வணங்கி வந்தனர். ஆனால் ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஊதுகுழலாக இருக்கிற பி ஜே பி அரசு தமிழரின் பண்பாடு வழிபாடுகளுக்கு விரோதமாக மாடுகளை உணவாகக் கொள்ளக் கூடாது என்று கட்டாயப்படுத்துகிறது. அவர்களது நிலைப் பாட்டுக்காக தமிழர்களை அழிக்கத் துணிகின்றனர். தமிழக கூலித்தொழிலாளிகளை மரம் திருடு பவர்கள் என்று சித்தரித்து விட்டு, சுட்டுக்கொன்ற சந்திரபாபு அரசின் மீது நடவடிக்கை எடுக்காது இருக்கின்றனர்.

அண்ணன் வைகோ, அண்ணன் தளபதி, அண்ணன் திருமாவளவன் அண்ணன் சீமான் போன்றவர்கள் தங்களது நிலைப்பாட்டை சற்றே மாற்றி வழிபாடுகளை தமிழர் முறைப்பாடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இவர்களுக் கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்காத ஊடகங்கள் தமிழ்த்தலைவர்களான இவர்கள் பக்கம் திரும்ப வேண்டும் என்றால் இந்துத்வா என்பதில் உள்ள பார்ப்பனிய ஏமாற்று மோசடிகளை எல்லாம் விலக்கி தமிழர் வழிபாட்டை முழுமையாக இவர்கள் செயல்படுத்த முன்வந்தால் ஊடகங்கள் இவர்கள் பக்கம் திரும்பும். தமிழர்களுக்கும் நல்ல காலம் விடியும்.

**தொடரும்....**

# தலைமுறை

“பரம்பரை“யின் உண்மையான பொருள்! நாம் ஏதாவது ஒரு விஷயத்தை பற்றி பேசும் பொழுது, பரம்பரை பரம்பரையாய் இருக்கிறது என்று சொல்வதுண்டு.

பரம்பரை என்றால் என்ன? வழிவழியாக என்று சொல்லலாம் என்றாலும் “தலைமுறை தலைமுறையாக“ என்பதே உண்மைபொருள் ஆகும் அப்படியென்றால், பரம்பரை என்பது முந்தைய தலைமுறையை குறிக்கும் சொல்லா? ஆம்! பரன்+ பரை = பரம்பரை நமக்கு அடுத்த தலைமுறைகள் நாம் மகன் மகள் பெயரன் பெயர்த்தி கொள்ளுப் பெயரன் கொள்ளுப்பெயர்த்தி எள்ளுப்பெயரன் எள்ளுப்பெயர்த்தி நமக்கு முந்தைய தலைமுறைகள்

**நாம் முதல் தலைமுறை**

தந்தை+ தாய் இரண்டாம் தலைமுறை

பாட்டன்+ பாட்டி மூன்றாம் தலைமுறை

பூட்டன்+ பூட்டி நான்காம் தலைமுறை

ஓட்டன்+ ஓட்டி ஐந்தாம் தலைமுறை

சேயோன் + சேயாள் ஆறாம் தலைமுறை

பரன் + பரை ஏழாம் தலைமுறை

ஒரு தலைமுறை சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால் ஏழு தலைமுறை 480 வருடங்கள் ஈரேழு தலைமுறை 960 வருடங்கள் (கிட்டதட்ட ஆயிரம் வருடங்கள்) ஆக பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு பதினான்கு தலைமுறையாக என்றுபொருள் வரும் எனக்கு தெரிந்து, வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை. இதுவும் தமிழுக்கு ஒரு தனிச் சிறப்பு!.

**அமல்ராஜ்**

வட இந்திய கவியை வாதிட்டு வென்ற

# உமறுப்புலவர்

**உமாமகேசுவரி**

எட்டயபுரம் என்றதும் முண்டாசுப்புலவன் பாரதியை நினைவுகூர்வோம். அதே போன்ற பெருமையை எட்டயபுரத்துக்கு தந்தவர்களில் உமறுப்புலவருக்கும், முத்துசாமி தீட்சிதருக்கும் முக்கிய பங்கு உண்டு.

சீறாப்புராணம் என்ற காவியத்தை உமறுப் புலவர் தமிழுக்கு தந்து அமுதகவி என்று வணங்கப் படுகிறார். முத்து சாமி தீட்சிதர் சங்கீத மும்மூர்த்தி களில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

1642ஆம் ஆண்டில் உமறுப்புலவர் பிறந்தார். கல்வியில் கெட்டிக்காரராக விளங்கிய உமறுப் புலவர் பல்வேறு கலைகளிலும் சிறந்த விளங்கினார். இதனால் எட்டயபுரம் மன்னர் அரசவையில், தமிழ்த் தொண்டு புரியும் வாய்ப்பு உமறுப்புலவ ருக்கும் கிடைத்தது. அந்தச் சமயத்தில் அரசவைப் புலவராக கடிகை முத்துப்புலவர் பணியாற்றினார்.

அந்த நேரத்தில், எட்டயபுரம் அரண்மனையில் ஒரு நிகழ்வு நடைபெற்றது. அது உமறுப்புலவரின் தமிழ் ஆற்றலை வெளி உலகுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

வட இந்தியாவைச் சேர்ந்தவர், புலவர் வாலை வாருதி. இவர் பல்வேறு அரசவைக்கு சென்று வாதிட்டவர். எட்டயபுரம் அரண்மனைக்கும் வந்தார். அவரது புலமையைக் கண்டு எதிர்த்து வாதிட மூத்த புலவர்கள் எல்லாம் ஒரு கணம் யோசித்தனர். ஆனால், உமறுப்புலவர் துணிந்து வாதிட்டார். கவிபாடினார். வாலை வாருதியை உமறுப்புலவர் வென்றார். அதன்பின்வு அரசவை கவிஞர் என்ற சிறப்பையும் பெற்றார்.

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையை சேர்ந்த வள்ளல் சீதக்காதி மரைக்காயர் வணிக நிமித்தமாக எட்டயபுரம் அரண்மனைக்கு வந்து மன்னரைக் கண்டார். அப்போது, உமறுப்புலவரையும் சந்தித் தார். முகமது நபிகளின் வாழ்க்கை வரலாற்றை சீறாப்புராணமாக எழுத வேண்டும் என்று உமறுப்புலவரை கேட்டுக்கொண்டார். பின்னர் கீழக்கரைக்கு அவரை அழைத்துச் சென்றார்.

பைந்தமிழில் சீறாப்புராணத்தை எழுதி முடித்த உமறுப்புலவர், பரங்கிப் பேட்டையில் அரங்கேற்றம் செய்தார். அதன் பின்பும் அவரது தமிழ் தொண்டு தொடர்ந்தது.

சீறாப்புராணம் 3 காண்டங்களைக் கொண்டது. நபிகளாரின் பிறப்பு, சமயப் பணிகள், நபிகளார் மக்காவில் இருந்து மதீனா சென்ற வாழ்க்கை ஆகியவற்றை இந்த 3 காண்டங்களும் விளக்கிக் கூறுகின்றன.

இன்னொரு சிறப்புக்குரிய தகவல் என்னவென் றால், உமறுப்புலவர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் பேரரசராக அவுரங்கசீப் இருந்தார் என்பது...!

1703ஆம் ஆண்டில் எட்டயபுரத்தில் உமறுப் புலவர் இறந்து நல்லடக்கமானார். அவரது நினை விடத்தை நினைவு மணிமண்டபமாக தமிழக அரசு கட்டி திறந்தது.

உமறுப்புலவரின் வாரிசுகள் தற்போது தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் வசிக்கிறார்கள். அவர்களை ஒருங்கிணைத்து ஒரு அமைப்பை ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.



# இரத்தம் குடிக்கும் புத்தம்!

## பதைபதைக்கும் முஸ்லிம் படுகொலைகள்...

புத்தத்தை பூசிக்கும் தேசங்கள் இரத்தங்களையும் குடிக்கின்றன என்றால் அக்குருதியின் பிரதிபலிப்பு சிங்களத்தையும் பர்மியத்தையும் நோக்கியதாக தான் இருக்கும். சிங்களம் இனத்தின் பேரால் மனிதனை புதைக்கிறது என்றால், பர்மியமோ மதத்தின் பேரால் மனிதத்தை உடைத்து படுகொலைகளை புரிகிறது.

இலங்கையில் தமிழர்கள் வந்தேறிகளால் கொல்லப் படுகின்றனர், பர்மாவில் வாழ வந்த முஸ்லிம்கள் பர்மிய இராணுவம் புத்த பிக்குகளால் கொல்லப்படு கின்றனர்.

இரு நாட்டிலும் பௌத்த வெறி ஓங்கி உள்ளது. அது தன் தாக்கும் விதத்தை மட்டும் இனம்மதம் என பிரித்துக்கொண்டுள்ளது.

உலகின் கறுப்புச் சரித்திரத்தில் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், மதக்கோட்பாட்டால் நிகழ்ந்து கொண்டிருக்கும் மிகப்பெரிய படுகொலைகளின் பூர்வீகம் தான் பர்மா.

பர்மா இராணுவ ஜனநாயகவாதிகளால் ஆளப் படும் நாடு. தேசியமயமாக்கப்பட்ட நதிகள். அதனால் இயற்கையில் வறுமை என்பதே இல்லை.

தொழில்நுட்பத்தில்பின்தங்கிய தேசம். இந்தியாவை போலவே பல மொழி பேசும் இனத்தவர் உள்ள நாடு. ஆனால் அம்மக்களுக்கென சுயாட்சி இல்லை. பர்மியர்களுக்கு கீழ் நிலையில் இருக்கும் கூட்டாட்சி நிலை தான்.

பர்மாவின் இப்படுகொலைகளில் அதிகபடியாக சிக்குவதெல்லாம் முஸ்லிம் மதத்தவர்கள் தான். இன்றைய காலகட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக முஸ்லிம் மதத்தவர்களுக்கு எதிரான படு கொலைகளே பர்மாவில் விடாமல் நிகழ்ந்து கொண் டேயுள்ளன.

முகமறியா எந்தயொரு தேசத்திலோ குண்டு வெடித் தால் கூட, அது முஸ்லிம்தான் வைத்திருப்பான் என்பதே சர்வதேச கணக்கீடுகள். அக்கணக்கீட்டை இவ்வுலகம் நிர்ணயித்துக் கொண்டதால், எந்தயொரு முஸ்லிம் கொல்லப்பட்டாலும் சர்வதேச சமூகம் அலட்டிக்கொள்வதில்லை.

பர்மிய சுதந்திரத்துக்கு முன்பே, இரண்டாம் உலகப்போரின் ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது பர்மியஜப்பானிய இராணுவத்தால் 28 மார்ச் 1942 ம் ஆண்டு சுமார் 5,000 முஸ்லிம் மக்கள் கொல்லப் பட்டனர்.

அன்றிலிருந்து தொடங்கிய வெறி இதுவரை 20,000 முஸ்லிம்களை கொன்றுள்ளது. 4,000 குடும்பங்களை அழித்தும், எரித்துமுள்ளது. 300 மசூதிகளை மூடியுள்ளது. பல லட்சம் மக்களை பர்மாவை விட்டு துரத்தியடித்துள்ளது.

பர்மிய முஸ்லிம்கள் 'ரோஹிங்க்யாஸ்' என்றழைக்கப் படுகின்றனர். ஐ.நா.வின் கணக்கெடுப்புபடி இவர்களின் மொத்த எண்ணிக்கை 8 லட்சம். இவர்கள் அதிகபடி யாக பங்களாதேஷ்பர்மா எல்லையோரங் களில் வாழ்கின்றனர்.

பல நூறாண்டுகளாக வாழும் இந்த பர்மிய முஸ்லிம்களுக்கு பர்மாவில் குடியுரிமை கிடையாது. தங்கள் விருப்பத்திற்கு திருமணம் செய்ய அனுமதி யில்லை. கல்வியும் இவர்களுக்கு மறுக்கப்படுகின்றது.

இவர்களது குழந்தைகள் கொத்தடிமைகளை போல் சிறு ஊதியத்துக்கு குழந்தை தொழிலாளிகளாக்கப் படுகின்றனர். பர்மாவில் பல்லாண்டுகளுக்கு குடியேறிய இவர்கள் இன்னமும் அகதியாக தான் வாழ்கின்றனர்.

சுற்றுலா சொர்க்கமாகவுள்ள இந்நாடு, முஸ்லிம் சுற்றுலாவாசிகளை அனுமதிக்க மறுக்கிறது. மீறினால் அது கொலை சுற்றுலாவாகத்தான் முடியும்.


இக்கொலைகளை நிகழ்த்துவது எல்லாம் பர்மிய இராணுவமும், புத்த பிக்குகளுமே. இவர்கள் கூற்றுப் படி பர்மா புத்த மதத்தவர்களுக்கானது, புத்தத்தை தழுவாதவர்கள் தீயவர்கள். கடவுள் இல்லை என்றால் அவர்கள் புத்த மதத்துக்கு எதிரானவர்கள்.

பர்மாவில் 20 லட்சத்திற்கும் மேலாக உள்ள தமிழர் களுக்கும் சுயமான சுதந்திர வாழ்வில்லைஅவர்களும் புத்தத்துக்கு மாறிய பர்மியர்களாகவே வேடமிட்டு வாழ்கின்றனர்.

புத்தனை போதிக்கும் தேசங்கள் மனிதத்தை புதைத்து இரத்த வெறியோடு திரிகின்றன. இவர்களுக்கு புத்தரின் வாக்கு ஏற்றதாக இருக்கும்.

ஆசையால் வெற்றி பெற்றவன் அந்தப் போதையால் தவறுகள் செய்து அழிவைத் தேடுவான். ஆனால் தன்ன டக்கம் உள்ள மனிதன் அறிவுடன் சிந்தித்து எப்போ துமே இன்பமாக வாழ்ந்திடுவான்.

சில புத்த தேசங்கள் சிந்திக்காமல் ஆசை போதை யில் உள்ளன. இவர்கள் ஒரு நாள் அவர்களாகவே அழிவை தேடுவார்கள். புத்தரின் வாக்கு போலவே !



# 72 ஆயிரம் பணியிடங்களுக்கு நடப்பாண்டில் போட்டித் தேர்வு

***மத்திய, மாநில அரசுத் துறைகளில்***

அரசின் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் கொட்டிக் கிடந்தாலும் போதிய விழிப்புணர்வு இல்லாமல் பலர் வாய்ப்பை தவற விடுகின்றனர். தனியார் நிறுவனங்களுக்கு இணையாக தற்போது நாட்டின் அரசுத் துறைகள், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள், என பல்வேறு பிரிவுகளிலும் வேலை வாய்ப்பு அதிகரித்து வருகிறது. நடப்பு ஆண்டில் மட்டும் தமிழகம் மட்டுமின்றி மத்திய அரசின் பல்வேறு துறைகள், ரயில்வே, வங்கிகள் உள்பட பல அமைப்புகளில் 72 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப போட்டித் தேர்வுகள் அடுத்தடுத்து நடத்தப்படவுள்ளது.

மத்திய அரசின் யூபிஎஸ்சி நடத்தும் போட்டித் தேர்வுகள் மற்றும் பணியாளர் தேர்வாணையம் (எஸ்எஸ்சி) மூலம் பட்டதாரி பணியிடங்களுக்கான ஒருங்கிணைந்த தேர்வு, மத்திய அரசின் பல்வேறு போலீஸ் பிரிவுகள் என பல்வேறு துறைகளில் கீழ்நிலையில் அலுவலக உதவியாளர் மூலம் அதிகாரிகள் பணியிடங்கள் வரை 20,834 பதவிகளுக்கு தேர்வுகள் நடத்தப்படவுள்ளது.

யூபிஎஸ்சி மூலம் 1,129 சிவில் சர்வீஸ் பணியிடங்களுக்கு( ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் உள்ளிட்ட 24 வகையான பணிகள்), தேர்வுகள் நடத்தப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. முதல்நிலைத் தேர்வு, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு என மூன்று கட்ட தேர்வுகள் உள்ளது. இதில் முதல்நிலைத் தேர்வான எழுத்துத்தேர்வு ஆகஸ்டு மாதம் 23ஆம் தேதி நடக்கிறது. இதற்காக விண்ணப்பிக்க அடுத்த மாதம் 19ஆம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள மருந்தாளுனர்கள், செவிலியர், அறுவைச் சிகிச்சை அரங்க உதவியாளர் என 731 காலிப்பணியிடங்களுக்கு டிப்ளமோ இன் பார்மஸி, பிஎஸ்சி நர்சிங் மற்றும் 10ஆம் வகுப்பு படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஎஸ்என்எல் நிறுவனத்தில் உள்ள 400 நிர்வாக பயிற்சியாளர் பதவிக்கு பிஇ, பி.டெக், சிஏ படித்த இன்ஜினியரிங் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். இதற்கான கடைசி நாளாக அடுத்த மாதம் 14ஆம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய ராணுவத்தில் உள்ள 334 ஹவில்தார் பதவிக்கு இளநிலை மற்றும் முதுநிலை பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தெலுங்கானா மாநில மின்வாரியத்தில் உள்ள 1,919 உதவிப் பொறியாளர் பதவிக்கு பிஇ மற்றும் டிப்ளமோ படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தெற்கு ரயில்வேயில் 118 உதவி ஸ்டேசன் மாஸ்டர் பணியிடத்திற்கு டிப்ளமோ படித்தவர்களும், பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இதேபோல் விசாகப்பட்டினம் ஸ்டீல் பிளாண்டில் உள்ள 350 ஆப்ரேட்டர் பணிக்கு விண்ணப்பிக்க டிப்ளமோ இன் மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் மற்றும் கெமிக்கல் இன்ஜினியரிங், முடித்தவர்கள் தகுதியானவர்கள். விண்ணப்பிக்க கடைசி நாளாக அடுத்த மாதம் 2ஆம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் இந்தாண்டு குரூப் 2 தேர்வின் மூலம் தலைமை ஆய்வாளர், வருவாய் உதவி ஆய்வாளர் என 1,241 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. ஜூலை 26ஆம் தேதி நடைபெறவுள்ள முதற்கட்ட எழுத்துதேர்விற்கு, பட்டம் பெற்றவர்கள், வரும் 29ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் புள்ளியல் துறையில் உள்ள 268 உதவி புள்ளியல் ஆய்வாளர் பதவிக்கு பட்டப்படிப் பில் புள்ளியலை ஒரு பாடமாக படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என கூறப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க அடுத்த மாதம் 3ஆம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் பதவிக்கான எழுத்துத்தேர்வு அடுத்த மாதம் 5ஆம் தேதி நடக்கிறது.

பட்டுவளர்ச்சித் துறையில் உள்ள 171 உதவி ஆய்வாளர் மற்றும் இளநிலை ஆய்வாளர் பணிக்கு 10ஆம் வகுப்பு, பிளஸ் 2, அறிவியல் பாடப்பிரிவில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் பெற்றிருப்ப துடன் பட்டு வளர்ச்சித் துறையில் குறைந்தது 6 மாதகாலம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இதற்காக விண்ணப்பிக்க கடைசி நாள் அடுத்த மாதம் 8ஆம் தேதியாகும்.

தமிழகம் மட்டுமின்றி மத்தியப் பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களிலும் ஏராளமான காலி பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகள் நடக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் 2400 வனக்காவலர்கள் மாநில வனத்துறையில் உள்ள 2,400 வனக்காவலர் பணிக்கு 10ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 முடித்தவர்கள் வரும் 28ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இதேபோல் மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள 1,333 அலுவலக உதவியாளர், பாதுகாவலர்கள் பணியிடத்திற்கு 8ஆம் வகுப்பு படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான கடைசி நாளாக அடுத்த மாதம் 6ஆம் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநில போக்குவரத்துத் துறையில் உள்ள 1,167 கண்டக்டர் பணியிடத்திற்கு 10ஆம் வகுப்பு முடித்தவர்கள் வரும் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். உத்திர பிரதேச மாநில மின் வாரியத்துறையில் உள்ள 884 டெக்னீசியன், கிரேடு 2 பணியிடத்திற்கு 10ஆம் வகுப்பு மற்றும் ஐடிஐ முடித்தவர்களும், 981 உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர் பணியிடத்திற்கு டிப்ளமோ, பட்டப்படிப்பு முடித்தவர்களும், அடுத்த மாதம் 17ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி பல்வேறு பொதுத்துறை வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள் நேரடி எழுத்துத் தேர்வுகள் மூலம் ஆட்களை நியமிக்கவுள்ளன. தமிழகத்திலும் பல்வேறு துறைகளில் நேரடி நியமனம் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

### அதிகரிக்கும் போட்டி

அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெறுவது இன்றைய 90 சதவீத இளைஞர்களின் கனவாக உள்ளது. இவர்கள் அனைவரும் எப்படியாவது அரசு சார்ந்த பணியில் சேர வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டுள்ளனர். இதன்விளைவாக, அரசு மூலம் கிடைக்கும் எந்த வேலையையும் விட மனமில்லாமல் அனைத்திற்கும் விண்ணப்பித்து காத்துகிடக்கின்றனர். அரசு அலுவலக உதவியாளர் பணிக்கான ஆட்தேர்வின்போது,

அதற்கான கல்வித்தகுதி 10ஆம் வகுப்பு என அறிவிக்கப்பட்டாலும், அங்கு எம்பிஏ,

எம்சிஏ உள்ளிட்ட முதுகலை பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கின்றனர். வேலை கிடைக்கவேண்டும் என்பது மட்டுமின்றி, இதுபோன்ற தேர்வுகள் மூலம் அனுபவத்தை பெறுவதற்காகவும் பலர் எழுதுகின்றனர். காலி பணியிடங்கள் குறைவாக இருந்தாலும் அதைக் காட்டிலும் பல மடங்கு விண்ணப்பங்கள் வருகின்றன. உதாரணத்திற்கு கடந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட தமிழக அரசின் குரூப்4 தேர்வுக்கு மொத்தம் 4963 பணியிடங்களுக்கு 10.61 லட்சம் பேர் தேர்வு எழுதினர். விண்ணப்பித்தவர் எண்ணிக்கை மட்டும் 12.72 லட்சம். தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட எஸ்.ஐ தேர்வில் 1078 பணியிடங்களுக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் தேர்வு எழுதினர்.

நன்றி: ***அரசியல் அலசல்.***

வேலை தேடும் நண்பர்களுக்கு ஓர் தகவல்!! வேலை தேடுவதற்கு உதவும் இணையதளங்களை கொடுத்துள்ளோம் இந்த தளங்களில் உங்கள் தகவல்களை பதிவு செய்து உங்கள் தகுதிக்கும் திறமைக்கும் உரிய வேலையை பெற்று வாழ்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்...

---

www.careerbuild er.co.in

www.clickjobs.c om

www.placementpo int.com

www.careerpoint placement.com

www.glassdoor.c o.in

www.indtheright job.com

www.employmentg uide.com

www.JOBSTREET.com

www.JOBSDB.COM

www.AE.TIMESJOB S.COM

www.NAUKRIGULF. COM

www.NAUKRI.COM

www.GULFTALENT. COM

www.BAYAT.COM

www.MONSTER.COM

www.VELAI.NET

www.CAREESMA.CO

www.SHINE.COM

www.freshersliv e.com

www.jobsahead.c om

www.BABAJOBS.co

www.WISDOM.COM

www.indeed.co.i n

www.sarkarinauk riblog.com

www.jobsindubai .com

www.jobswitch.i n

www.jobs.oneind ia.com

www.fresherswor ld.com

www.freejobaler t.com

www.recruitment news.in

www.firstnaukri .com

www.freshnaukri .com

www.mysarkarina ukri.com

www.freshindiaj obs.com

www.freshersope nings.in

www.freshersrec ruitment.in

www.chennaifres hersjobs.com

அரசுவேலைகள் பற்றி அறிந்து கொள்ள:

www.govtjobs.al l

lindiajobs.in

www.timesjobs.c om

www.naukri.com

www.tngovernmen tjobs.in

www.sarkariexam .co.in

www.govtjobs.ne

www.indgovtjobs

நாராயணன்.

சிறுகதை

# சின்னான்

இருங்கோவேள்

சின்னானுக்கு வயது அறுபத்தைந்து மூன்று பெண் குழந்தைகள், ஒரு மகன் பிறந்திருக்கிறானே என்று மகிழ்ச்சி அடைந்தார். மகன் பிறந்த செய்தியைக் கேட்ட நேரத்தில், ஆவலாய்க் குழந்தை யைச் சென்று பார்த்தார். மகிழ்ச்சியால் குழந்தையை முழுவதுமாகப் பார்த்த அவரது கண்கள் மனைவியின் முகத்தை மோதின. அவரது மனைவியின் கண்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டி ருந்தது. அவள் முகத்தில் ஓர் ஆற்றாமை தென் பட்டது. என்னம்மா என்னாச்சு என்று மனைவி யிடம் சின்னான் கேட்டுக்கொண்டிருந்தபோது அவர்கள் அருகில் வந்த மருத்துவர். நீங்க தாங்கிக்க தான் வேணும்.”

குழந்தையின் கால்கள் செயலற்று இருக்கிறது. இயன்றவரை பார்த்துவிட்டோம் போபியோ என்ற நோய் தாக்கியிருக்கிறது. மற்றபடி குழந்தை ஆரோக்கியமாக இருக்கிறது கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொல்லிச் சென்றார்.

சின்னானுக்கும் அழுகை முட்டியது என்ற போதிலும், பெற்றெடுத்தவள் நலன் கருதி தன் கண்ணீரை அடக்கிக் கொண்டு, நா தழுதழுக்க மனைவிக்கு தேறுதல் மொழியைக் கூறி விட்டு, மனைவியிடம் என்ன தேவை என்று கேட்டு அதை கொண்டு வர வீட்டுக்குச் சென்றார். மனதில் மகிழ்ச்சியும் கவலையும் சம அளவில் நின்று கொண்டு கை கொட்டிச் சிரித்தன. மகன் பிறந்ததைக் கொண்டாடுவதா? அவனால் நடக்க முடியாது என்பதை எண்ணக் கவலைப்படுவதா? குழம்பித் தவித்தார் சின்னான்.

பிள்ளைகள் வளர்ந்தார்கள். சின்னானின் மகன் முருகன் கவலை என்பதே தெரியாமல் வளர்ந்தான். காரணம் அவனுடைய மூத்த சகோதரிகள் மூவரும்



தான். தம்பியை அவர்கள் அப்படிக் கவனித்துக் கொண்டார்கள்.

சின்னான், வீடுகளுக்கு வண்ணம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அந்த வண்ணக்கூழ்களை நிரப்பும் தகரத்திலான கொள்கலன்களைச் (டப்பா) செய்யும் நிறுவனத்தில் வேலை பார்த்தார். ஒரு குடும்பம் பிழைக்கப் போதுமான ஊதியம் கிடைத் தது. ஒரு சிறிய இடத்தை வாங்கி வீடு கட்டினார். இரண்டு மனை இடங்களும் வாங்கிப் போட்டிருந் தார்.

பெண் பிள்ளைகள் வேகமாக வளர்ந்தார்கள். திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்ற நிலை வந்தது. ஓரிரண்டு ஆண்டுகால இடை வெளியில் மூன்று பெண்களுக்கு திருமணத்தை நடத்தி வைத் தார். இரண்டு இடங்களையும் விற்றும் தன்னிட மிருந்த சேமிப்பை செலவு செய்தும் பெண் பிள்ளை களை கரையேற்றினார்.

இரண்டாண்டுகள் கடந்தன. மகனுக்கு ஏற்ற பெண்ணைப் பார்த்தே ஆக வேண்டும் என்ற நிலை வந்தது. அந்த நேரத்தில்தான் ஒரு சோதனையும் சின் னானுக்கு வந்து சேர்ந்தது. பிளாஸ்டிக் கொள்க லன்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் தகரத்தில் செய்து வந்த சின்னான் வேலை செய்த நிறுவனம் மூடப்பட்டது. தகரத்தை விட பிளாஸ்டிக் விலை குறைவு, அதைத் தயாரிக்கும் செலவும் குறைவு என்ப தால் பலர் அத்தொழிலைச் செய்யலாயினர்.

சின்னானுக்கு வேலை போனது. புதிய வேலை தேடி அலைந்தார். ஒரு இடத்தில் இரவுக் காவலர் வேலை கிடைத்தது.

மகனுக்குப் பெண் தேடினார். மகள்களுக்க மாப் பிள்ளை பார்ப்பதை விட மிகவும் கடினமாக இருந் தது. மகனின் திருமணத்தை முடிப்பதற்கு ஒரு வழியை அவர் கண்டுபிடித்தார் திருமணம் ஆன உடனேயே மகன் பெயருக்கு இப்போது இருக்கும் வீட்டை மாற்றி பதிந்து விடுகிறேன் என்று பெண் வீட்டார்களிடம் சொல்லிப்பார்த்தார். சிலர் ஒத்துக்கொள்ளவில்லை. இறுதியாக ஒரு பெண் ணைப் பார்த்தார். அவர்களது குடும்பம் மிகவும் ஏழ்மையான ஒன்று. அவர்கள் வீட்டில் இரண்டு பெண்பிள்ளைகள் ஒருத்திக்கு திருமணம் முடிந்து வாழா வெட்டியாக வீட்டில் இருந்தாள். மறு மணத்தை அந்தப்பெண் விரும்பவில்லை. இரண்டா வது பெண் தான் சின்னானின் மகனுக்குப் பேசப் பட்டது. அந்தக்குடும்பத்தினர் வாடகை வீட்டில் தான் வசித்தனர். நகரத்தின் குப்பைகளை தேக்கி வைக்கும் இடத்திற்கு அருகாமையில் ஒரு குடிசை யில் வசித்தனர். அவர்களது வாழ்க்கை முறை சின் னானுக்குப் படிக்கவில்லை தான் என்றாலும் மகனுக்கு திருமணம் நடக்க வேண்டும் நமக்குப்பின் அதனைப் பார்த்துக்கொள்ள ஒரு ஆள் வேண்டுமே என்று சின்னான் யோசித்து மனைவியிடம் பேசி முருகனின் திருமணத்தை முடித்தனர். திருமணம் முடிந்து ஒரு வாரம் தான் ஆகியிருக்கும். முருகன் தனது தந்தையிடம் அப்பா பெண் வீட்டார் உங்கள் “அப்பா எப்போது வீட்டை உங்கள் பெயருக்கு மாற்றுவார்கள் என்று கேட்கிறார்கள்” என்றான். மாத்தலாம் மாத்தலாம் என்று சின்னான் கூறிவிட்டு வேலைக்குச் சென்று விட்டார். அடுத்த நாள் பெண்வீட்டில் இருந்து பெண்ணின் தாய் வந்திருந் தாள். “நீங்கள் திருமணம் பேசும்போதே வீட்டை மாப்பிள்ளை பெயருக்கு மாற்றித் தருகிறேன் என்று சொன்னீர்களே. இப்போது ஏன் தள்ளிப் போடு கிறீர்கள் என்று கேட்டார். சின்னானோ கவலை யுற்றவனாகி அந்த நேரத்தில் தப்பிக்க, இடத்தை அவன் பெயருக்கு மற்றிப் பதிவு செய்ய பணம் இல்லை என்றார். முருகனின் மாமியாரோ அந்தப் பணத்தை நான் ஏற்பாடு செய்கிறேன் வருகிற புதன் கிழமை காலை பத்திர அலுவலகம் வந்து விடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த முருகனும் அவனது மனைவியும் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தனர். சின்னவனின் மனை வியோ என்னங்க இவ இப்படிப் பேசிட்டுப்போறா என்றார். சின்னானோ நாம பொண்ணு பாக்கும் போதே சொன்னது தானேம்மா, அவன் பெயருக்கு மாத்திதான் ஆகணும், என்று வேகமாக தரையில் அமர்ந்தார்.

அந்தப் புதன்கிழமை வந்தது. சின்னான் பத்திரப்பதிவு அலுவலகம் சென்று தனது வீட்டை மகன் பெயருக்கு மாற்றி கையெழுத்துப் போட்டு விட்டு வந்தார்.

அதன்பிறகு ஒரு மாதம் கூட நகர்ந்திருக்காது. அடையாளம் தெரியாத சிலர் அவ்வப்போது முருகனை வந்து பார்த்துச் சென்றனர். “என்னடா” என்று மகனிடம் கேட்ட சின்னானுக்கு கிடைத்த பதில்” மனைவியின் உறவினர்கள்” என்று பதில் தான் கிடைத்தது. அதன்பிறகு 12 நாட்கள் கடந்

தன. முருகன் சின்னானிடம் நான் ஒரு பத்து நாள் மாமியார் வீட்டில் இருந்து நடந்து வருகிறேன் என்று தகவல் சொல்லிவிட்டு அனுமதி கேட்காமல் சென்று விட்டான் நாட்கள் 15 ஆனது முருகன் திரும்பவில்லை ஆனால் நான்கு பேர் சின்னான் வீட்டிற்கு வந்து, எப்போது வீட்டைக் காலி செய்கிறீர்கள், என்று கேட்க சின்னானுக்கு இதயம் சிறிது நேரம் நின்று ஓடியது. அவர்களிடம் விசாரித்த போது தான் தெரிந்தது மகன் இந்த வீட்டை அவர்களுக்கு விற்றது. சின்னானோ ஒன்றும் புரியா தவராய் கொஞ்ச நாள் பொறுத்துக் கோங் கய்யா என்று கெஞ்சினார். அவர்களோ ஒரு மாதம் தவணை தருகிறோம் அதற்குள் காலி செய்துவிடுங்கள் என்று கட்டளையிட்டு விட்டுச் சென்றார்கள். இது நடந்த இரு தினங்களில் மருமகளும் அவளது அம்மாவும் வந்தார்கள் முருகனின் துணிகள் மருமகள் கொண்டுவந்த சில பாத்திர பண்டங்களை எடுத்தார்கள், சின்னானும், அவர் மனைவியும் கேட்ட கேள்விகளுக்கு எந்த எதுவும் சொல்லாமல் பொருட்களை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

சின்னான் வாடகை வீடு தேட ஆரம்பித்தார். தனது சம்பளத்தில் வாடகை கொடுத்து குடும்பத் தைச் செலுத்துவது என்பது கடினம்தான் என் றாலும் வேறு என்ன செய்ய முடியும். ஒரு குப்பத்தில் சிறிய வீட்டை, அதை வீடு என்று சொல்லிவிட முடியாது ஒரு அறையை வாடகைக்கு எடுத்துத் தங்கி னார்.

மகன் இப்படிச் செய்து விட்டானே என்று அவர் தினம் தினம் வருத்தப்பட்டாலும், நான் சாவ தற்குள் என்மகன் அனாதையாக என்னைக் காப் பற்றுங்கள் என்று என்னிடம் வந்துவிடக் கூடாது, என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதையே கடவுளிடம் தனது வேண்டுகோளாக வைத்தார்.

# அம்பேத்கர் – பெரியார் வாசகர் வட்டம் தடை நீக்கம்

சென்னை ஐஐடியில் இயங்கி வந்த அம்பேத்கர் – பெரியார் வாசகர் வட்டம் மீதான தடை நீக்கப்பட்டது.

அம்பேத்கர் – பெரியார் வாசகர் வட்டம் என்ற பெயரில் சென்னை ஐஐடியில் ஒரு மாணவர் அமைப்பு இயங்கி வந்தது. இந்த அமைப்பு மத்திய அரசின் கொள்கைகளை யும் பிரதமர் மோடியையும் விமர்சித்து பிரச்சாரம் செய்வதாக கூறி கடந்த மே 15-ம் தேதி அதன் அங்கீகாரத்தை ஐஐடி நிர்வாகம் ரத்து செய்தது.

இதற்கு தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். மாணவர் மற்றும் இளைஞர் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் தடையை வாபஸ் பெறக்கோரி கடந்த வாரம் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ஐஐடி இயக்குநர் பேராசிரியர் பாஸ்கர் ராமமூர்த்தி, டீன் (கல்வி) கே.ராமமூர்த்தி ஆகியோரை மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். தடையை நீக்கிவிட்டு மீண்டும் அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று அப்போது அவர்கள் வலியு றுத்தினர். இதைத் தொடர்ந்து ஐஐடி நிர்வாகம் மற்றும் மாணவர் அமைப்பு சார்பில் 7.6.2015 இரவு ஒரு கூட்டு அறிக்கை வெளியிடப் பட்டது.

அந்த அறிக்கையில் கூறியிருப் பதாவது:

அம்பேத்கர் – பெரியார் வாசகர் வட்டம் அமைப் பானது ஒரு சுதந்திரமான மாணவர் அமைப்பு என்று ஐஐடி மாணவர் பிரிவு டீன் மீண்டும் அங்கீகாரம் அளித்துள்ளார். ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் மிலின்ட் பிரமி சுதந்திரமான மாணவர் அமைப்புகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக அம்பேத்கர்–பெரியார் வாசகர் வட்டத்துக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவார்.

மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் முன்வைத்த கோரிக்கைகள், சில மாற்றங்கள் தொடர்பாக மாணவர் கள் வாரியம் ஆலோசனை செய்தது. அவற்றில் ஒருசில விஷயங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதர மாற்றங் கள் குறித்து மாணவர் விவகார குழுவும், மாணவர்கள் வாரியமும் ஆய்வு செய்யும்.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


கோடைகேற்ற காட்டன் ஆடைகளையும்,
பரவசமூட்டும் அனைத்து வித பள்ளிச் சீருடைகளை
வாங்கி மகிழ்ந்திட அழைக்கிறது
உங்கள்
ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c
Let Us Enjoy Summer
விரிவுபடுத்தப்பட்ட மாளிகை
135, நேரு வீதி,
திண்டிவனம்.

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

